RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Anantham oorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள்அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL


மலர்:- 30, 02 யூன் 2023 இதழ்:- 06

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# பௌத்தத்தை அவமதித்தமைக்காக நடாசாவை கைது செய்ய முடியுமென்றால் ஏனைய மதங்களை அவமதித்த ஞானசாரரை ஏன் கைது செய்ய முடியாது- சந்திரிகா கேள்வி



பௌத்தத்தை அவமதித்தமைக்காக நடாசாவை கைது செய்ய முடியும் என்றால் ஏனைய மதங்களை அவ மதித்த ஞானசாரரை ஏன் கைதுசெய்ய முடியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க டுவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பியுள் ளார். நடாசா பௌத்தத்தை உள்நோக்கத் துடன் அவமதித்த மைக்காக கைது செய்யப்பட்டார். அவரை கைது செய்ய முடி யும் என்றால் இஸ்லாமிய மதத்தை அவமதித்த தேவாலயங் களையும் கிறிஸ்தவ வழிபாட்டு இடங்களையும் மசூதிகளை யும் எரியூட்டிய ஞானசார தேரர் உட்பட ஏனைய பலரை ஏன் கைது செய்ய முடி யாது என முன்னாள் ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் முன்னாள் புலனாய்வாளர் சுட்டுக்கொலை கொலையாளிகள் இராணுவ மேஜரின் வாகனத்தைப் பயன்படுத்தினர்



லெப்டினனட் கேணல் துவான் முத்தலிஃப் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான வர்த்தகர், பொரளையில் வைத்து அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர், தமிழீழ விடுதலைப்புலிகளின்முன்னாள் புலனாய்வாளர் ஆவார். அவரை படுகொலைச் செய்வதற்கு வந்த ஆயுததாரிகள் பயன் படுத்தி கப் ரக வாகனம் இம்புல்கொடயில் வைத்து கொழு ம்பு குற்றப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.(7ம்பக்கம்)

# நகைச்சுவையாகின்றதா தமிழர் அரசியல்?

# இனியும் எங்களால் போராட முடியுமா? காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆதங்கம்!

இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது என வவுனியா மாவ ட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார். வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக 30 மே 2023 (5ம் பக்கட் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
Licence # 10530
1-877-366-3487

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

THINKING OF
# SELLING OR BUYING A HOME?



20 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Markham & Eglinton**

Scarborough $525,000
Bedrooms: 3 Washrooms: 2
Big, Bright And Beautiful Condo

**Dundas/Hurontario St**

Mississauga $639,000
Bedrooms: 3 Washrooms: 2
Very Spacious Bright Condo


**King St. S & Queen St. S**

Hamilton $699,900
Bedrooms: 2 Washrooms: 2
Platinum Condos at DT Hamilton


**Bridge St W & Woolwich St**


Kitchener $799,000
Bedrooms: 3 Washrooms: 3
Freehold Townhouse End Unit

**Yonge St / Queens Quay**

Toronto $978,000
Bedrooms: 2 Washrooms: 2
Modern Living By The Lake!

**Queens Quay & Lower Sherbourne**

Toronto $849,900
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

**Chinguacousy & William Pkwy**

Brampton $1,075,900
Bedrooms: 4 Washrooms: 3
End-Unit Townhouse, Corner Lot!


**River Street & Highway 12**

Brock $1,350,000
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement

**Meadowvale / 401**

Scarborough $1,899,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.

**Bur Oaks/Markham Rd**

Markham $550,000
Bedrooms: 1 Washrooms: 1
Newer Modern Condo Building

**Finch & Pharmacy**

Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Living & Dining

**Grey Highlands**


Markdale $7,200,000
Dollarama And Tim Hortons
Newly Built Tim Hortons Building

**Birchmount/Lawrence**

Scarborough $639,000
Bedrooms: 2 Washrooms: 2
Upgraded And Maintained Unit

**Mccowan & Ellesmere**
FOR LEASE

Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

**Dixie Rd & Kingston Rd**
FOR LEASE

Pickering $1,850
Bedrooms: 1 Washrooms: 1
Beautiful Recently Renovated

**Victoria Park / Innismore**
FOR LEASE

Scarborough $1,300
Bedrooms: 1 Washrooms: 1
Great Location! Newly Renovated

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# பௌத்தத்தை அவமதித்தமைக்காக நடாசாவை கைது செய்ய முடியுமென்றால் ஏனைய மதங்களை அவமதித்த ஞானசாரரை ஏன் கைது செய்ய முடியாது - முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கேள்வி



பௌத்தத்தை அவமதித்தமைக்காக நடாசாவை கைது செய்ய முடியும் என்றால் ஏனைய மதங்களை அவ மதித்த ஞானசாரரை ஏன் கைதுசெய்ய முடியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க டுவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார். நடாசா பௌத்தத்தை உள்நோக்கத் துடன் அவமதித்தமைக்காக கைது செய்யப்பட்டார். அவரை கைது செய்ய முடியும் என்றால் இஸ்லாமிய மதத்தை அவமதித்த தேவாலயங்களையும் கிறிஸ்தவ வழி பாட்டு இடங்களையும் மசூதிகளையும் எரியூட்டிய ஞானசார தேரர் உட்பட ஏனைய பலரை ஏன் கைது செய்ய முடி யாது என முன் னாள் ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

முஸ்லீம்கள் தமிழ் பிரஜைகளிற்கு எதிரான வெறுப்புணர்வு பேச்சுக்கள் நடாசாவின் வார்த்தைகளை விட தீய நோக்கம் கொண்டவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவர் ஷாபிக்கு எதிராக பொய் களை தெரிவித்து நாடு முழுவதும் அதனை பரப்பி நல்ல மனிதரின் வாழ்க் கையை அழித்த அயோக்கியர்களிற்கு என்ன நடந்தது எனவும் கேள்வி எழுப்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி குற்றவாளிகளை கைது செய்து தண் டிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிற்கு இன்னமும் காலம் உள் ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். அவ் வாறு அவர் செயற்பட்டால் அதுவே உண்மையான ஜனநாயக நாடாக காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பௌத்தர்களாகிய நாங்கள் பௌத்த கொள்கை களை நேர்மையாக பின்பற்றினால் இன்றுள்ளது போல நாடு குழப்பத்தில் காணப்படாது எனவும் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பௌத்தம் உயர்ந்த மதிப்பை பெறவேண்டியது அவசியம் ஆனால் ஏனைய அனைத்து மதங்களும் சமமான முக்கியத்து வத்தை பெறவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சீமான், திருமுருகன்காந்தி ட்விட்டர் கணக்குகள் முடக்கம்! தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம்!

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்பட அக்கட்சியைச் சேர்ந்த பலரது ட்விட் டர் கணக்குகள் இந்தியாவில் முடக்க ப்பட்டுள்ளன. முதல்வர் மு.க. ஸ்டா லின் உள்ளிட்டோர் இதற்குக் கண்ட னம் தெரிவித்துள்ளனர். இதற்குக் காரணம் என்ன?

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அக்கட்சி யைச் சேர்ந்த இடும்பாவனம் கார்த்திக், பாக்கியராசன், சுனந்தா ஆகியோரது ட்விட்டர் கணக்குகள் புதன் மாலை யிலிருந்து இந்தியாவில் முடக்கப் பட்டன.

இந்தக் கணக்குகள் எதற்காக முடக்க ப்பட்டுள்ளன என்று அனுப்பப்பட்ட மின்னஞ்சலில், இந்தியாவின் தகவல் தொடர்பு சட்டத்தை மீறியதால் இந்தக் கணக்குகள் முடக்கப்பட்டிருப்பதாக ட்விட்டர் நிறுவனம் கூறியிருக்கிறது. சீமான் உள்பட நாம் தமிழர் கட்சியின் பொறுப்பிலுள்ள 12 பேரின் ட்விட்டர் கணக்குகள் தற்போது முடக்கப்பட்டு ள்ளன. எந்த ட்வீட்டிற்காக இந்தக் கணக்குகள் முடக்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்து தெளிவான தகவல் கள் இல்லை.

கடைசியாக மல்யுத்த வீராங்கனை களின் போராட்டம் குறித்த அறிக்கை தான் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகே கணக்குகள் முடக்கப்பட்டன.' என்கிறார் நாம் தமிழர் கட்சியின் செய்தித் தொடர்பாளரான சே. பாக்கிய ராசன். அதேபோல, மே 17 இயக்கத்தின் @may17movement என்ற அதிகார பூர்வ ட்விட்டர் கணக்கும் முடக்கப் பட்டுள்ளது. சட்டபூர்வமாக வந்த கோரிக்கையை ஏற்று இந்தக் கணக்கு கள் முடக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக் கப்பட்டிருக்கிறது. மே 17 இயக்கத் தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தியின் ட்விட்டர் கணக்குகள் இரண்டு ஏற்கெனவே முடக்கப்பட்ட நிலையில், தற்போது அந்த அமைப் பின் கணக்கும் முடக்கப்பட்டிரு க்கிறது.

ட்விட்டரில் பதிவு செய்யப்படும் கரு த்து தவறாக இருந்தால் அந்த ட்வீட்டை மட்டும் தடை செய்யலாம். ஆனால், அந்தக் கணக்கையே முடக் குவதென்பது வாய்ப்பூட்டுச் சட்டத் தைப் போல இருக்கிறது. நாங்கள் தொடர்ந்து சமூக ஒற்றுமைக்கு ஆதர வாகவும் கலவரங்கள், தனிநபர் தாக்கு தல்கள், மதவெறி, சாதிய படுகொலை களுக்கு எதிராகவும் பதிவிட்டு வரு கிறோம்.

தனிநபர்களைக் கொச்சைப்படுத்தவோ சமூக விரோத செயல்பாட்டுக்கு ஆதரவாகவோ எங்கள் கணக்குகளைப் பயன்படுத்துவதில்லை. அதேபோல, நாங்கள் வெளியிட்ட ட்வீட்டில் ஏதா வது தவறான கருத்து இருக்கிறது என்று, எந்த வழக்கும் எங்கள் மீது கிடையாது.

ஏதாவது ஒரு சம்பவம் குறித்து முதல்வரின் கவனத்திற்கோ அதிகாரி கள், காவல்துறையினரின் கவனத்தி ற்கோ கொண்டு செல்ல ட்விட்டரைப் பயன்படுத்துகிறோம். சமூக அநீதிகள் குறித்து நாங்கள் கவனப்படுத்துகி றோம். எங்கள் கணக்குகளை முடக்கு வதன் மூலம் ட்விட்டர் சமூக அநீதியை விரும்புகிறதா என்ற கேள்வி எழுகிறது. ட்விட்டர் மட்டுமல்ல ஃபேஸ்புக்கும் இதைத்தான் செய்கிறது. என்கிறார் திருமுருகன் காந்தி. மே 17 இயக்கத்தின் ட்விட்டர் கணக்கில் கடைசியாக, ஈழப் போர் குறித்த நினைவேந்தல் நிகழ்ச்சி குறித்த தகவல் கள்தான் பதிவு செய்யப்பட்டிருந்தன. அந்த நிகழ்ச்சி அரசின் அனுமதியோடு தான் நடந்தது என்கிறார் திருமுருகன்.


இப்படி ட்விட்டர் கணக்குகள் முடக்க ப்பட்டிருப்பதற்கு தமிழ்நாடு முதலமை ச்சர் மு.க. ஸ்டாலின் கண்டனம் தெரி வித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் சகோதரர் திருமுருகன் காந்தி உள்ளிட்டோரது ட்விட்டர் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டிருப்பது கண்டனத்திற் குரியது. கருத்துகளைக் கருத்து களால் எதிர் கொள்வதே அறம். கழுத்தை நெரிப்பது அல்ல. ட்விட்டர் முடக்கத்தை விலக்கி, சமூக ஊடக த்தை அதற்கான தரத்துடன் செயல்பட அனுமதிக்க வேண்டும்.' என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சீமான் மற்றும் நாம் தமிழர் கட்சியினரின் கணக்குகள் முடக்கப்பட்டதற்கு திமுகவே கார ணம் என்றும் சென்னை மாநகர ஆணையர் சங்கர் ஜிவால் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே கணக்கு கள் முடக்கப்பட்டதாகவும் சமூக ஊட கங்களில் சிலர் கருத்துகளைத் தெரி வித்தனர்.

இதற்கு சென்னை மாநகர காவல் துறை மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ட்விட்டரில்

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# கோடி கோடியாய் சம்பாதிக்கும் இந்து ஆலயங்கள் இந்து மக்களின் வறுமையைப் போக்க முடியாதா?

வறுமையை காரணம் காட்டி இந்து மக்கள் மதம் மாற்றப்படுகின்றார்கள் என்று கூக்குரலிடுகின்றோம். ஏன் இந்து தனவந்தர்களால், இந்து அமைப்புகளால் இந்து மக்களின் வறுமையை துன்பத்தைப் போக்குவதற்கு முடியாதா? கோடி கோடியாய் சம்பாதிக்கின்ற ஆலயங்களுக்கு இது முடியாதா? இவ்வாறு, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவில் இடம் பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போது கேள்வி எழுப்பினார். இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் –

இந்து மக்கள் மக்களின் வறுமையினை பயன்படுத்திமாற்று மதத்தினர் உதவியை செய்து மதம் மாற்றி வருகின்றனர். இதனை தொடர்ச்சியாக காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நிலைமையை ஏன் இந்து அமைப்புகளால் இணைந்து ஏன் நிவர்த்தி செய்ய முடியாது? அது போல கோடிக் கணக்கில் சம்பாதிக்கும் பெரிய பெரிய ஆலயங்கள் இந்த இந்து மக்களின் வறுமையினை அல்லது துயரை ஏன் துடைக்க முடியாது?

அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற அதே போல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற பெரிய ஆலயங்கள் சேர்ந்தாலே இந்து மக்களின் வறுமையை நிச்சயம் போக்க முடியும்.

இறைவன் நேரடியாக வந்து மக்களின் பிரச்னைகளை தேவைகளை ஒரு போதும் தீர்த்து வைப்பதில்லை. மாறாக சில மனிதர்களூடாக அமைப்புகளூடாக நம்மை போன்றவர்களை கருவியாக பயன்படுத்தியே மக்களின் பிரச்னைகளை தேவைகளை தீர்த்து வைக்கின்றார்.

எனவே அந்த அமைப்பினர் மனிதாபிமானத்துடன் செயல்பட்டு இந்த மக்களின் வறுமையை போக்க முன்வர வேண்டும் என்று கூறி வருகின்றோம் ஆனால் அது அவர்களது காதுகளில் ஏறுவதாக இல்லை.

நாங்களும் ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். ஆலயங்கள் தங்கள் திருவிழாக்கள் என்றால் மக்களிடம் கையேந்துகிறார்கள். அதே மக்கள் அனர்த்தத்தில் அல்லது நாட்டு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற பொழுது அந்த மக்களுக்கு பெரிதாக உதவுவது இல்லை.

இதுபோன்ற காரணங்களினால் அவர்கள் மதம் மாறுவதில் ஒரு பக்கம் நியாயமும் இருக்கின்றது. எனவே அந்த கேள்விக்குரிய விடை எம்மிடம் தான் உள்ளது என்பதனை மறந்து விட முடியாது. இங்கு அமெரிக்காவில் வாழ்கின்ற இந்து அன்பர்கள் அளித்த அன்பளிப்பு இந்த மக்களுக்கு வழங்கப்படுகின்றது. அதையிட்டு அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம் .ஆனால் இதையிட்டு சந்தோசம் அடைய முடியாது .ஏனென்றால் இங்குள்ள இந்து தனவந்தர்கள் அமைப்புக்கள் ஆலயங்கள் இந்த விடயத்தை கவனிக்க வேண்டும். அப்பொழுது தான் இந்த மத மாற்றங்களை தவிர்க்கலாம் தடுக்கலாம்.

இங்கே இந்து சேவக சங்க அம்பாறை மாவட்ட கிளை பாரியதொரு பணியை செய்து வருவதையிட்டு சந்தோசமடைகின்றேன். மேலதிக அரசாங்க அதிபர் என்ற வகையில் காரைதீவிலிருந்து ஏனைய தமிழ் கிராமங்களில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற இந்து அன்பர்கள் இங்கு கஷ்டப்பட்டு வாழ்கின்ற இந்து மக்களுக்கு உதவுவதற்கு நீங்கள் நேசக்கரம் நீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

# பேராசிரியர்கள் ஒன்றிணைந்தால் வடக்கு கிழக்கு கல்வியில் உச்சம் பெறும்

பேராசிரியர்கள் ஒன்றிணைந்து செயல்படுவார்கள் என்றால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை கல்வியால் உச்சத்துக்கு கொண்டுவர முடியும் என்று கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.

இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் நிகழ்வு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர்கள், சமூகப் பொறுப்பாளர்கள், சான்றோர்கள் ஒன்றுகூடி நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் சிந்திக்க வேண்டும் பேராசிரியர்கள் நல்லதை நினைப்பார்கள் என்றால் வடக்கு, கிழ



க்கு, மலையகத்தை கல்வியால் உச்சத்துக்குக் கொண்டு வரமுடியும். பல்கலைக்கழகத்துக்குள் மாத்திரம் பேராசிரியர்கள் இருக்காது சமூகத்தில் இறங்கி சமூகத்தைப் பாதுகாக்க முன்வரவேண்டும். யாழ். பல்கலைக்கழத்தில் தற்போதுள்ள துணைவேந்தரின் காலத்தில் பல பேராசிரியர்கள் உருவாகி வருகின்றார்கள்.

இவ்வாறாக வருகின்ற அனைத்துப் பேராசிரியர்களும் ஒன்றிணைந்து சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும். அது மட்டுமின்றி துணை வேந்தர் பல்கலைக்கழகத்துக்கு புதிய பாடத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்றால் அதற்கு காணிகள், கட்டடங்கள் இல்லை என்று அந்தத் திட்டத்தை கைவிடாது தெல்லிப்பழை துர்கதை அம்மன் ஆலயத்தை தொடர்பு கொண்டால் நாம் அதற்கான வழி அமைத்துத் தருவோம். யாழ்ப்பாணத்துக்கு (22ம் பக்கம் பார்க்க)




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

02 யூன் 2023 வெள்ளிக்கிழமை
வைகாசி விசாகம் – விசாகப் பொங்கல்
உபயம்:– திருநாவுக்கரசு குடும்பம்
இளையபெருமாள் குடும்பம், மணிமாலை விஷ்ணுசுந்தரம் குடும்பம்

03 யூன் 2023 சனிக்கிழமை – பௌர்ணமி விரதம்
உபயம்:– திருஞானப்பிள்ளை நித்தியராணி குடும்பம்

15 யூன் 2023 வியாழக்கிழமை –பிரதோஷ விரதம்
வைகாசி விஷாகம் அன்று கனடா முத்துமாரி அம்மனுக்கு பொங்கல் வைக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இனியும் எங்களால் போராட முடியுமா? காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆதங்கம்!

இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார்.



வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக 30 மே 2023 செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் முப்பதாம் திகதி சர்வதேச நீதியை கோரி கவன ஈர்ப்பு போராட்டத்தை மேற் கொண்டு வருகின்றோம். உறவுகளை கடத்தி காணாமல் ஆக்கப்பட்டு, சரணடைந்து, கையில் ஒப்படைக்கப்பட்ட, எமது உறவுகளை தேடித்தான் நாம் ஜனநாயக போராட்டத்தை அகிம்சை வழியில் 14 வருடங்களாக தொடர்ச்சியாக வீதியில் நின்று போராடி கொண்டிருக்கின்றோம்.

புதிய அரசாங்கமானது, பயங்கரவாத தடை சட்டத்தை எடுப்பதாக கூறி, புதிதாக பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டத்தை அமுல்படுத்த நினைக்கின்றார்கள். ஆனால் அதை செய்கின்ற போது எமது ஜனநாயக போராட்டத்திற்கான கருத்து சுதந்திரமோ தனியாகவோ அல்லது கூட்டாகவோ சேர்ந்து போராடுவதற்கு பயங்கரவாத எதிர்ப்பு தடை சட்டமானது ஒரு படிக்கல்லாக அமையும் என்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், ஏனையவர்களிடமும் நிறைவேற்றாது நிறுத்த வேண்டும் என்பதனை ஊடக வாயிலாக கேட்டு கொள்கின்றோம்.

இலங்கை தேசத்து மக்கள் அழிக்கப்பட்டிருக்கின்ற போதும் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கும் எந்த ஒரு நீதியும் வழங்காமல் இந்த சர்வதேசம் பார்த்து கொண்டிருக்கின்றது. அதே போன்று கடத்தி காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்ற உறவுகளை தேடி நீதிக்காக போராடிக் கொண்டிருக்கின்ற போது இலங்கை தேசத்தை ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கின்றீர்கள். உறவுகள் இனியாவது மனிதர்களாக வாழ வேண்டும். ஏனையவர்களுடன் வாழ்வதற்கு உதவ வேண்டும் என்பதற்காக நடக்க இருக்கின்ற கூட்ட தொடரிலாவது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றங்கள் இழைத்தவர்களை பாரப்படுத்தி மக்களுக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் என்பதை நாம் மிகவும் பணிவாக கேட்டு நிற்கின்றோம்.

இனி எங்களால் போராட முடியுமா? என்பது கூட எமக்கு தெரியாமல் இருக்கின்றது. ஏனென்றால் அச்சுறுத்தல்கள், தடை உத்தரவுகள் இருந்தன. தற்போது நீதிமன்ற வழக்குகள் கூட எமக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு கொண்டிருக்கின்றன. எனவே தொடர்ச்சியாக போராட சர்வதேசம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

# ஜனாதிபதி ரணிலுக்கு சீனா பூரண ஆதரவு!




இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு சீன அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என்று சீன வெளிவிவகார துணை அமைச்சர் சன் வெய்டாங் வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் சீனா ஆர்வம் காட்டுவதாக சீன துணை அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் 30 மே 2023 செவ்வாய்க்கிழமை சந்தித்த போது மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார். இந்த நெருக்கடியான காலப்பகுதியில் இலங்கைக்கு சீனாவின் அசைக்க முடியாத ஆதரவிற்கு ஜனாதிபதி, சீன துணைஅமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்வதில் சீனாவின் அர்ப்பணிப்பை வலியுறுத்திய துணை அமைச்சர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளை ஆராய சீனா ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

சீன வெளிவிவகார துணை அமைச்சர் சன் வெய்டாங்கின் இலங்கை விஜயம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் வாய்ப்பாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கவிஞர் வைரமுத்து மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

கவிஞர் வைரமுத்து மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என முதல்வர் மு.க. ஸ்டாலினை குறிப்பிட்டு பிரபல பாடகி சின்மயி கேள்வி எழுப்பியுள்ளார். தன்னிடம் அத்துமீறியதாக பாடகி சின்மயி உட்பட 17க்கும் மேற்பட்ட பெண்கள், கவிஞர் வைரமுத்து மீது துஷ்பிரயோக குற்றச்சாட்டை முன்வைத்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.





இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் நிலையில், சின்மயி மீண்டும் வைரமுத்து குறித்து பதிவிட்டுள்ளார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் திமுக எம்பி கனிமொழி ஆகியோருக்கு கோரிக்கை விடுத்து சின்மயி இந்த ட்வீட்டை பதிவிட்டுள்ளார். அவரது பதிவில், 'பாலியல் குற்றச் சாட்டுகள் எழும் போது ஒவ்வொரு முறையும் நீங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு கொடுக்கிறீர்கள். இந்தியா முழுவதும் இது போல் பெண்கள் பாதிக்கப்படும் போது அவர்கள் பக்கம் நிற்கிறீர்கள். இது போல் (22ம் பக்கம் பார்க்க)

# நகைச்சுவையாகின்றதா தமிழர் அரசியல்?

ஒரு குறிப்பிட்ட சூ ழலில் ஆக்கிரமிப்பு நிகழ்வதாக உணரும்போது பாதிக்கப்பட்ட மக்கள் ஜனநாயக வழியில் தங்களின் எதிர்ப்பைக் காண்பிப்பர்.

இது ஓர் உலகம் தழுவிய ஜனநாயக ஒழுங்கு. உலகெங்கும் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புப் பேரணிகளும் நடைபெற்றிருக்கின்றன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவுகள் எதிர்பார்த்தவாறான விளைவுகளைத் தராவிட்டாலும் கூட இவ்வாறான எதிர்ப்புகள் ஒரு நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றது என்பதைக் காண்பிப்பதற்கான ஓர் அளவுகோலாகவே நோக்கப்படுகின்றது.

உதாரணமாக ஈராக் மீதான யுத்தத்தை எதிர்த்து அமெரிக்க வீதிகளில் இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் திரண்டனர். யுத்தத்தை நிறுத்துமாறு கூறினர்.

ஆனால், யுத்தத்தை நிறுத்த முடிந்ததா இல்லை ஏனெனில், அதிகார சக்திகளின் நகர்வுகளுக்கு எதிராக சிலர் வீதிகளில் கூடுவதால் மாற்றங்களை ஏற்படுத்தி விட முடியாது. ஆனால், நாடு தழுவிய ரீதியில் ஆட்சியாளர்களுக்கு எதிராக பல இலட்சக் கணக்கான மக்கள் திரளும்போது, அதற்கு செவி சாய்க்கவேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும்.

நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்காக ஆட்சியாளர்கள் தங்களின் நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். இதற்கு தென்னிலங்கையில் இடம் பெற்ற சிங்கள 'அறகலய' ஓர் அண்மைய உதாரணமாகும்.

ஆனால், தமிழ் சூழலைப் பொறுத்தவரையில் அண்மைக் காலத்தில் ஆங்காங்கே போராட்டங்கள் என்னும் பெயரில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன அவற்றில் பெரும்பாலும் குறித்த கட்சிகளை சேர்ந்த ஒரு சில அரசியல்வாதிகளும் கட்சியின் ஆதரவாளர்கள் சிலருமே பங்கு கொள்கின்றனர்.

தற்போது தையிட்டி விகாரையை அகற்றுமாறு கூறி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சில எண்ணிக்கையான கட்சியின் ஆதரவாளர்களும் போராட்டம் என்னும் பெயரில் அங்கு கூடியிருக்கின்றனர். ஆனால், யாழ்ப்பாணத்திலுள்ள சாதாரண மக்களோ அதனைத் திரும்பியும் பார்க்கவில்லை.

ஒன்றில் அந்தக் கட்சியை மக்கள் நம்பவில்லை அல்லது குறித்த நடவடிக்கை பொருத்தமற்ற ஒன்றென்று அவர்கள் கருதுகின்றனர். அல்லது மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய அரசியல் சூழலை ஏற்படுத்தக்கூடிய வல்லமையை தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் முற்றிலுமாக இழந்து விட்டன. இவற்றில் ஒன்றே மக்கள் இதனை பொருட்படுத்தாமைக்கான காரணமாகும்.

உண்மையில், தையிட்டி விகாரை பல வருடங்களாகக் கட்டப்பட்டு தற்போது வழிபாடுகளுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. குறித்த விகாரை இலங்கையில் இதுவரையில் நிறுவப்பட்ட விகாரைகளில் இரண்டாவது நிலையில் உயரம் கூடியதாக நோக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு விகாரை நிர்மாணிக்கப்படும் வரையில் எவருமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. மக்களும் விகாரையின் கட்டுமானத்தைப் பார்த்தவாறே பல வருடங்களாக அந்த வழியால் சென்று கொண்டிருந்தனர். ஆனால் எல்லாம் முடிவுற்றவுடன் தற்போது போராட்டமென்று காங்கிரஸ் கூறுகின்றது.

போராட வருமாறு மக்களை அழைக்கின்றது. ஆனால் மக்களோ இவ்வாறான நடவடிக்கைகள் எவற்றையும் பெரிதுபடுத்துவதாகத் தெரியவில்லை. இவ்வாறான நடவடிக்கைகளை எவ்வாறு வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதென்று கட்சிகள் சிந்திக்க வேண்டும் இல்லாவிட்டால், போராட்டம் என்னும் சுலோகத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் இவ்வாறான விடயங்கள் தமிழர் அரசியலை நகைச்சுவைக்கு உரியதாக்கி விடலாம்.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை

# தமிழ் இனப் படுகொலை தொடர்பான கனடியப் பிரதமரின் கருத்துக்கு ஸ்ரீலங்கா முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சொல்வது என்ன?

கனேடிய பிரதமர் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்தது என்று கூறும் கருத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். விசாரணைகள் எதுவுமின்றி இப்படியான சொல்லை கனேடிய பிரதமர் பயன்படுத்தியது கண்டனத்துக்குரியது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விடம் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


மே 18ஐ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக பிரகடனம் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்த மாட்டாது என்று கனடாப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் இறுதிப் போரில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டில் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நீதியான விசாரணை எதுவும் இதுவரை நடைபெறவில்லை. அதனால் தான் பாதிக்கப்பட்ட தரப்பினர் சர்வதேசத்திடம் நீதி வேண்டி நிற்கின்றார்கள். இந்தநிலையில் தான் வெளிநாடுகளின் தலைவர்களும் சர்வதேசப் பிரதிநிதிகளும் இலங்கை அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து



வருவதுடன் நாட்டை அவமானப்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

ஒரு நீதியான உள்நாட்டு விசாரணை நடத்திருந்தால் வெளியில் இருப்போர் நாட்டையும், அரசையும் இவ்வாறு தூற்றி இருக்க மாட்டார்கள். எனினும் கனேடியப் பிரதமர் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்தது என்று கூறும் கருத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். விசாரணைகள் எதுவுமின்றி இப்படியான சொல்லை கனேடியப்



பிரதமர் பயன்படுத்தியது கண்டனத்துக் குரியது என கூறியுள்ளார்.

இதேவேளை கடந்த காலங்கள் போன்று அரசியல் தீர்வுக்கான பேச்சும் குழம்பிப் போகாமல் அதைத் தொடர வேண்டியது இரு தரப்பினரதும் பொறுப்பாகும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் ஆரம்பமாகியுள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சை வரவேற்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசியல் தீர்வு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதிக்கும் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லாது என்பதை நான் அன்று தொடக்கம் இன்று வரை எடுத்துரைத்து வருகின்றேன்.

எனது ஆட்சியில் அரசியல் தீர்வுக்காக என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறேன். அந்த முயற்சி ஏன் பலனளிக்கவில்லை என்பதும், அதைக் குழப்பியடித்த தரப்பினர்கள் யார், யார் என்றதையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என தெரிவித்துள்ளார்.

## மிஸிசாகா, பிரம்டன் தனி நகரங்களாகின்றன!

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் அமைந்துள்ள பிரம்டன் மற்றும் மிஸ்ஸிசாகா ஆகிய இரண்டு பகுதிகளும் தனி நகரங்காக அறிவிக்கப்பட உள்ளன.

பீல் பிராந்தியத்தின் மூன்று நகர மேயர்களுடனும் இணைந்து ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடாத்த உள்ளதாக மாகாண நகராட்சி விவகார அமைச்சர் ஸ்டீவ் கிளார்க் தெரிவித்துள்ளார்.

பீல் பிராந்தியத்தினை கலைப்பதன் மூலம் இவ்வாறு புதிய இரண்டு நகரங்கள் உருவாகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனினும் கலெடெனின் நிலை என்ன என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

பீல் பிராந்தியத்திலிருந்து விலகி தனித்து இயங்க அனுமதிக்குமாறு மிஸ்ஸிசாகா மேயர் போனி க்ரோம்பே நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றார். இந்த நிலையில், மிஸ்ஸிசாகா மற்றும் பிரம்டன் ஆகியன தனி நகரங்களாக அறிவிக்கப்பட உள்ளதாக அரசாங்க உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கனடாவில் நூறு பாரிய நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட கருத்து கணிப்பில் மகிழ்ச்சியான நகரம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி மிகவும் மகிழ்ச்சிகரமான நகரமாக ஒன்றாரியோ மாகாணத்தின் கெல்டன் நகரம் பெயரிடப்பட்டுள்ளது. அதேநேரம் மகிழ்ச்சியற்ற நகரமும் ஒன்றாரியோ மாகாணத்தில் பட்டியலிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தமிழ் மக்களின் இருப்பை அச்சுறுத்தும் இனவாத நடவடிக்கை தொடர்ந்தால் இந்திய - பசுபிக் புதிய ஒழுங்கினைப் பின்பற்ற வேண்டியிருக்கும் - துளசி




தமிழ் மக்களின் இருப்பை அச்சுறுத்தும் இனவாத நடவடிக்கைகள் தொடர்ந்தால் இந்தியாவினை பின்பற்றும் நிலை ஏற்படும் என ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் துளசி தெரிவித்துள்ளார்.

29 மே 2023 திங்கட்கிழமை அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக கேள்விக்குட்படுத்த ப்படும் இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு சரத்வீரசேகர கூறுவதைப் போல பௌத்தர்கள் சட்ட த்தை புதிதாக கையில் எடுக்க வேண்டிய தேவை யில்லை. ஏற்கனவே ஆசியாவின் நூல் சுரங்கம் யாழ் நூலகத்தின் மீது உங்கள் தீக்குச்சி கொளுத்தி எறியப் பட்டதோ அப்போதே பௌத்தம் சட்டத்தை கையில் எடுத்து விட்டது.

வெலிக்கடையில் குட்டிமணியின் கண்கள் தோண்ட ப்பட்டபோதும் முள்ளிவாய்காலில் வகைதொகையின்றி ஈழத்தமிழினம் இனப்படுகொலை செய்யப்பட்ட போதும் இலங்கையின் சட்டத்தை கையகபடுத்தியவர்கள் நீங்கள் தான்.

சிங்கள பேரினவாதத்தின் வக்கிர கோரதாண்டவம் ஆடும் அக்கினி குஞ்சுகள் நீங்கள் தான் என்பதை ஈழத் தமிழர்களும் சர்வதேச நாடுகளும் நன்கு அறியும். புதிய உலக ஒழுங்கில் நடாத்தப்பட்ட மிக மோசமான Biblioclasm நிகழ்த்தியவர்கள் நீங்கள் தான்.

சிங்கள பௌத்தம் தேரவாத மத அடிப்படைவாத சக்தி கள் மற்றும் சிங்கள பெருந்தேசியவாத வாக்குகளால் உருவாக்கப்பட்ட இலங்கை அரசு இதில் கோட்டாபய அரசும் விதிவிலக்கல்ல. நாட்டில் ஏற்பட்ட பொருளா தார வீழ்ச்சியால் எந்த சிங்கள மக்கள் கோட்டாபயவை மற்றும் பொதுஜன பெரமுனவினரை யுத்த வெற்றி கதாநாயகர்களாகவும் சிங்கள இனத்தின் மீட்பர்களாக கருதினார்களோ அதே சிங்கள மக்களால் கோட்டபாய அரசு ஆட்சி அதிகாரத்திலிருந்து துரத்தி அடிக்கப் பட்டார்கள்.

நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்க வந்த மீட்பராக ரணில் விக்கிரமசிங்கவும் உலக நாடுகளிடம் கடன்களை பெற்றுக் கொண்ட போது கொடுத்த வாக்குறுதிகளில் முக்கியமானது தமிழ் மக்களிற்கான நிரந்தரமான அரசியல் தீர்வு. போர் குற்றவாளிகளிற்கு தண்டனை, பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம்

ஆனால் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாடு மீண்டு வருகின்றதான வெளித் தோற்றப்பாடு காட்டப்படுகின்ற வேளையில், இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் ஈழத்தமிழர்களின் பூ ர்வீக நிலங்களில் மிக வேகமான பௌத்த மயமாக்கல் மற்றும் வடகிழக்கு மாகாண வாழ் தமிழ் மக்களை அச்சுறுத்துவது போல் சிங்கள மத அடிப்படைவாத பாராளுமன்ற உறுப்பினர்களால் தமிழ் மக்களுக்கு மிரட்டல்கள் விடப்படுகின்றன.

உதாரணமாக அண்மையில் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேசிய பாதுகாப்புக் குழுவின் தலைவராகவும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜயதாச இராசபக்சே, வெளியுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆகியோரின் ஆசியை பெற்றுள்ள சரத் வீரசேகர என்பவர் இலங்கையில் வாழ்கின்ற அப் பாவி ஈழத்தமிழர்கள் மீது அச்சுறுத்தலை ஏற்படுத்து கின்றார்.

சரத் வீரசேகர அவர்கள் நிபந்தனைகள் தொடர்ந்தால் சிங்களவர்கள் சட்டத்தை கையிலெடுக்க வேண்டி வரும் என்ற எச்சரிக்கையை தமிழ் மக்களை நோக்கி விட்டிருந்தார். இலங்கை தீவில் தமிழ் மக்கள் இன்று வரை அனுபவிக்கும் அத்தனை துயரங்களிற்கும் காரணம். சிங்களபௌத்த தேரவாத சிந்தனை கொண்ட அரசியலாகும். அதே அரசியல் தான் இலங்கையின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில். விழ்த்தியது.

ரஷ்யா உக்கிரைன் போரும் அதன் பின்னரான சர்வதேச அரசியல் மாற்றங்கள் . இந்திய கொள்கை வகுப்பாளர் கள் மத்தியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருப் பதை இந்திய மத்திய அரசின் அண்மைக்கால நடவடி க்கைகள் மிக தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை ஜனாதிபதி அவர்கள் ஒருபுறம் சர்வதேசத் திற்கு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்து சர்வதேசத்தை ஏமாற்றிக் கொண்டு மறுபுறம் சிங்கள பௌத்த பேரினவாதிகளை யும் அவர்கள் சிங்கள இனவாத அரசியலையும் அனு மதிக்கிறாரா என்ற நியாயமான சந்தேகம் தமிழ் மக்களுக்கு எழாமல் இல்லை.

தொடர்ந்தும் பௌத்த பேரினவாத சக்திகள் தமிழ் மக்களின் வரலாற்று பூர்வீக நிலங்களையும் வணக்க ஸ்தலங்களையும் பௌத்த மதத்தின் பெயரால் ஆக்கிர மிப்பு செய்து தமிழ் மக்களின் இருப்பையும் அச்சுறுத் தும் விதமான இனவாத நடவடிக்கைகள் தொடர்ந்தால் இந்திய பசுபிக் பிராந்தியத்தில் ஒரு புதிய ஒழுங்கினை நோக்கி இந்தியா பயணிக்கிறது.

அந்த ஒழுங்கினை பற்றிக் கொள்ள வேண்டிய யதார்த்தமான தேவை ஈழத்தமிழர்களுக்கு எழும் தவிர்க முடியாத சூழ்நிலையை உருவாக்கி உள்ளீர்கள். அப்படி பிராந்திய ஒழுங்கினை பற்றிக்கொள்ளும் ஈழத்தமிழர்கள் பயணிக்கும்போது எமது தேசிய இனத் திற்கு எதிராக நீங்கள் பற்ற வைத்த இன அழிப்பு நெருப்பிற்கும் மற்றைய எல்லா அக்கிரமங்களுக்கும் உலக அரங்கில் கை கட்டி சாட்சி சொல்ல வேண்டி வரும். அவ்வாறான இடர் மிகுந்த திருப்பத்திற்குள் சிங்கள தேசத்தை நீங்கள் தள்ளி செல்கின்றீர்கள் என்பதே காலத்தின் நிதர்சனமான உண்மையாகும்.

# இறுதி ஆசை நிறைவேறாமல் மீளாத்துயில் கொள்ளும் போப்



தமிழுக்கு மிகப்பெரிய தொண்டாற்றிய ஆங்கில தமிழ் மற்றும் மொழியியல் மேதை ஜி.யு.போப் தனது நண்பருக்கு எழுதி கடிதத்தில் இறுதி ஆசைகள் மூன்றினைத் தெரிவித்திருந்தார்.

1. கல்லறையில் ஒரு தமிழ் மாணவன் என்று எழுது ங்கள்.

2. மொழி பெயர்த்த திருக்குறள் நாலடியார் போன்ற நூல்களைக் கல்லறையில் வையுங்கள்.

3.கல்லறை கட்டுவதற்குத் தமிழர்கள் ஒரு சிறு உதவி யேனும் செய்யுங்கள். என்பவை தான் அந்தக் கோரிக்கைகள்.

கடந்த 28.05.2023 அன்று லண்டனிலிருந்து ஆறு நூல்களைப் படைத்த படைப்பாளி பொறியியலாளர் திரு.எம்.ரி.செல்வராஜா அவர்களையும் அழைத்துக் கொண்டு ஒக்ஸ்போட் நகரில் Walton well Road இலிருக்கும் ஜி.யு.போப்பின் கல்லறையைக் காணச் சென்றிருந்தேன். அதுவொரு ஞாயிற்றுக்கிழமை



ஒக்ஸ்போட் நகரத்தின் பிரதான வீதியில் காணப்படும் அந்த மயானத்துக்குள் நுழைந்தோம். மயானத்தின் ஆரம்பத்திலேயே சுமார் எட்டாவது, ஒன்பதாவது கல்லறையாக அமரர் ஜி.யு.போப்பின் கல்லறை காணப்படுகிறது. தனது வாழ்விலே கல்லறை பற்றிக் கனவு கண்டவரின் கல்லறை பத்தோடு பதினொன் றாகத் தனித்த அடையாளங்கள் எதுவுமின்றி இருப் பது எமக்கு வேதனையைத் தந்திறது.

உலகளாவிய ரீதியிலே ஜி.யு.போப்பின் வரலாற்றைக் அறியும் போது.அவர்தம் கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான் என்று எழுதப் பட்டுள்ளதாகவே கற்பிதமாகிறது. அதனையே பல ரும் நம்புகிறார்கள். ஆனால் அது உண்மை இல்லை.

அங்கே அப்படி எதுவும் எழுதப்படவில்லை. அவரு டைய இறுதி ஆசை இதுவரைக்கும் நிறைவேற்றப் படவேயில்லை. கல்லறை சாதாரண கல்லறையாகவே காணப்படுகிறது. தமிழ் மக்களாகிய நாங்கள் ஜி.யு. போப்பின் கல்லறையில் அவர் தம் விருப்புகளைப் பதிய வேண்டியது அவசியம் என்று நான் கருது கிறேன். நன்றி:- கல்லாறு சதீஷ்.

# புலிகளின் முன்னாள் புலனாய்வாளர் சுட்டுக்கொலை
## கொலையாளிகள் இராணுவ மேஜரின் வாகனத்தைப் பயன்படுத்தினர்

லெப்டினன்ட் கேணல் துவான் முத்தலிஃப் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான வர்த்தகர், பொரளையில் வைத்து அண்மையில் சுட்டுக் கொல்லப்பட் டார். இவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் புலனாய்வாளர் ஆவார். அவரை படுகொலைச் செய்வதற்கு வந்த ஆயுததாரிகள் பயன்படுத்தி கப் ரக வாகனம் இம் புல்கொடயில் வைத்து கொழும்பு குற்றப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டு ள்ளது. இந்த கப் ரக வாகனத்தின் உரிமையாளர், இராணுவத்தின் மேஜர் ஆவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த கப் ரக வாக னத்தை இராணுவ மேஜர், கொள்ளு ப்பிட்டியில் உள்ள வாகனங்களை வாடகைக்கு விடும் நிறுவனத்து க்கு வாடகைக்கு விட்டுள்ளார்.

வர்த்தகரை படுகொலைச் செய்த



வர்கள் இந்த வாகனத்தை வாட கைக்கு அமர்த்தியே இந்த குற்றச் செயலை புரிந்துள்ளனர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்ட றியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கித்தாரிகள் இருவரும், அந்த கப் வாகனத்தில் பொரளை குறுக்கு வீதிக்கு வந்துள்ளனர்.

அதன்பின்னர் அவ்விடத்தில் இற ங்கி மோட்டார் சைக்கிளில் பேஸ் லைன் ஊடாக லெஸ்லி ரணகல மாவத்தைக்குச் சென்று இந்தக் குற்றச்செயலை புரிந்துள்ளனர். இந்த படுகொலைக்கு ஒத்துழைப்பு நல்கினர் என்றக் குற்றச் சாட்டின் கீழ் நால்வர் கைது செய்யப்பட்டு, பொலிஸாரின் பொறுப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# தமிழ்நாட்டில் பொதுத்தேர்வில் 600க்கு 591 மதிப்பெண் பெற்ற இலங்கைத் தமிழ் மாணவியின் கல்விக்கு உதவிய அமைச்சர்



மதுரை மாவட்டம், ஆனையுர் ஈழத் தமிழர் முகாமில் வசித்துவரும் ரித்யுஷா 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 600க்கு 591 மதிப்பெண் பெற் றும், மேற்படிப்பு படிக்க வசதியற்ற ஏழ்மைநிலையில் இருக்கும் செய்தியறிந் தவுடன், ரித்யுஷாவின் உயர்கல்வி செலவை முழுமையாக ஏற்றதுடன், கல்லூரியிலும் இடம் பெற்றுக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு தொழில்நுட்பத் துறை அமைச்சர், அன்பிற்கினிய சகோ தரர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்களுக்கு எனது அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன் என நாம் தமிழ் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் சீமான் மேலும் தெரி வித்துள்ளதாவது அடிப்படை வசதிகள் ஏதுமற்று, குறைந்த பட்ச கற்கும் வாய்ப்புகள் கூடக் கிடைக்கப் பெறாத, தமிழ்நாட்டின் வதை முகாமில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழ் சொந்தங்களுக்கு உதவ வேண்டியது ஒவ்வொரு தமிழ ரின் கடமையாகும். அந்த வகையில் தனிப்பட்ட முறையில் தாங்கள் செய்த பேருதவி ஒரு குழந்தையின் வாழ்வில் ஒளியேற்றி வைத்த போதிலும், அதனை தமிழ்நாடு அரசே முன்னெடுக்கும் போது தான் நம்மையே நம்பி வந்துள்ள ஈழச்சொந்தங்கள் அனைவரின் வாழ் விலும் மிகப்பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

ஆகவே மாண்புமிகு அமைச்சர் பி.டி. ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டுச் சென்று, ஈழத்தமிழர் முகாம்களில் வசிக்கும் அனைத்து குழந்தைகளின் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன்என நாம் தமிழ் கட்சியின் தலைவர் சீமான் தெரி வித்துள்ளார்.

## இன மத வெறுப்பைக் கக்கும் தேரர்களை நோக்கியும் சட்டம் பாய வேண்டும் -மனோ



போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் சமூக பேச்சாளர் நதாஷா எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக அரசாங்கத்தின் சட்டம், ஒழுங்கு விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னேடுக்கப்படுகின்றன. சட்டம், ஒழுங்கு, நீதி துறை தன் கடமையை செய்யட்டும்.

அதேவேளை இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதங்களுக்கு எதிராக பேசி வரும் பௌத்த பிக்குகளுக்கு நோக்கியும் இதே சட்டம், ஒழுங்கு, நீதி துறை பாய வேண்டும். எந்தவொரு மத தலைவரும், செயற்பாட்டாளரும், தமது இனவாத, மதவாத நடவடிக்கைகள் தொடர்பில் இனிமேல் சட்டத்தின் முன் விலக்கு பெற கூடாது என தமிழ் முற போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி வெளியிட்டுள்ள டுவீடர் பதிவில் கூறி யுள்ளதாவது, பாஸ்டர் ஜெரோம், முற்போக்கு பேச்சாளர் நதாஷா ஆகியோரை சுற்றி வளைத்திருக்கும் பொலிஸ், நீதிமன்ற சட்டங்கள், இந்நாட்டில் இனவாத வெறுப்பு பேச்சுகளை தொடர்ந்து பேசி வரும் பௌத்த பிக்குமார்களுக்கு எதிராக வும் பயன்பட வேண்டும். இனிமேல் இந்நாட்டில், சட்டம் ஒருபக்க சார்பாக இரு க்க முடியாது. ஜனாதிபதி எதிர்கட்சி தலைவர் ஆகியோரின் டுவீடர் தளங்களு க்கும், தமது டுவீடர் செய்தியை மனோ கணேசன் எம்பி இணைத்துள்ளார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# நான்கு தசாப்தம் கடந்தும் நெஞ்சில் கொழுந்து விட்டெரியும் தீ!

ஓரினத்தை அழிக்க வேண்டுமானால் முதலில் அந்த இனத்தின் கலாசாரம் பண்பாடு, பாரம்பரியங்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதே ஆக்கிரமிப்பாளர்களின் ஊறிப்போன சித்தாந்தமாகும். அதன் காரணமாகவே தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு ,கிழக்கில் அன்று தொட்டு இன்று வரை ஒவ்வொரு வடிவங்களில் ஆக்கிரமிப்புகளும் தொடர்கின்றன. இவற்றுக்கு மத்தியில் 20ஆம் நூற்றாண்டின் ஆசியாவின் மிகவும் மோசமானதாக கருதி உலகமே கண்ணீர் விட்ட யாழ். நூலகம் எரிக்கப்பட்டு மே 31 ஆம் திகதியுடன் 42 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன .

தமிழர்களின் வளர்ச்சிக்கும் திறமைக்கும் அடிப்படை மூலதனமாக அமைந்தது கல்வி ஒன்றே என்று எண்ணிய அன்றைய ஆட்சியாளர்களின் கும்பலொன்று, தமிழ் இலக்கியத்தினதும் தமிழர் பாரம்பரியத்தினதும் பிறப்பிடமாக விளங்கிய யாழ். நூலகத்தை தீக்கிரையாக்கியது.

## வரலாற்றுப் பின்னணி

1934ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நூலகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் சளைக்காது உழைத்த புத்திஜீவிகளான கே. ம் . செல்லப்பா ,பேராசிரியர் டாக்டர் ஐசக் தம்பையா ஆகியோர் முக்கியமானவர்கள் அதைத் தொடர்ந்து பொது மக்களின் உதவியுடன் படிப்படியாக வளர்ச்சியடைந்து நூலகத்தின் முதல் பிரிவு நிறைவு செய்யப்பட்டு, 1959இல் அப்போது நகர பிதாவாக விளங்கிய அல்பிரட் துரையப்பாவால் திறந்து வைக்கப்பட்டது. நூலகம் சர்வதேச தரத்தில் அமைவதை உறுதி செய்யும் வகையில் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட பிரபல இந்திய நூலகர் எஸ் .ஆர் ரங்கநாதன் ஆலோசகராக பணியாற்றினார். அதேபோன்று கட்டிடத்தை சென்னையை சேர்ந்த எஸ்,நரசிம்மன் வடிவமைத்துக் கொடுத்தார் .

அன்றையதினம் கொழுந்து விட்டெரிந்த இந்த தீயால் பல நூற்றாண்டுகள் சேமித்து பாதுகாக்கப்பட்ட பனை ஓலைச் சுவடிகள் கையெழுத்து பிரதிகள் தனித்துவம் மிக்க 95 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரிய வகை நூல்கள், மற்றும் மயில்வாகனம் புலவர் 1736 இல் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலை (யாழ்பாணத்தின் வரலாறு) இந்து இராமாயண இதிகாசத்தின் பதிப்புகள், அழிந்து போன தமிழ் மொழி செய்தித்தாள்களின் தொகுப்புகள், முக்கிய ஆவணங்களின் மைக்ரோ.ஃபிலிம்கள் போன்ற பொக்கிஷமானவையும் நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கருகி சாம்பராகின .

அது மாத்திரமன்றி தத்துவஞானிகள் கலைஞர் மற்றும் கலை இலக்கிய எழுத்தாளர் ஆனந்த குமாரசுவாமி மற்றும் பிரபல புத்திஜீவி பேராசிரியர் டாக்டர் ஐசக் தம்பையா ஆகியோரின் படைப்புகள் நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளும் இவற்றுள் அடங்கும்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகங்களில் ஒன்றாக விளங்கிய யாழ். நூலக எரிப்பு சம்பவம் சர்வதேசத்தையே ஒருகணம் உறைய வைத்தது. இது மன்னிக்க முடியாத காட்டுமிராண்டித்தனம் என தமிழ் தலைவர்கள் பலரும் குற்றஞ் சாட்டினார்கள். இருந்தும் கூட தென்னிலங்கையை சேர்ந்த ஊடகங்கள் இது தொடர்பில் எதுவும் வெளியிடாமல் மௌனம் காத்தன.

பழங்கால திராவிட கட்டிடக்கலையை பறை சாற்றும் ஓர் அற்புதமான கட்டிடமாக விளங்கிய யாழ். நூலகம் , யாழ்ப்பாணத்துக்கான ஓர் அடையாளமாகவும் திகழ்ந்தது என்பதே உண்மை. அதனை அழிக்க வேண்டும் என்று காத்திருந்த பேரினவாத சக்திகளுக்கு சந்தர்ப்பமும் சாதகமாக அமைந்தது என்றே கூற வேண்டும். அக்கால கட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி நிலவியது .

அப்போது அமைச்சர்களான சிறில் மெத்தியு மற்றும் காமினி திஸாநாயக்க ஆகியோர் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருந்தனர் . இந்த நிலையில் அன்று 1981மே 31 நள்ளிரவு காடையர் கும்பல் திடீரென யாழ். நூலகம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையகம்



மற்றும் ஈழநாடு நாளிதழின் அலுவலகம் உட்பட யாழ். நகரம் முழுவதும் உள்ள வீடுகள் மற்றும் நூற்றுக்கும் அதிகமான கடைகள் என்பனவற்றிற்கு தீ வைத்து ருத்ர தாண்டவம் ஆடியது.

சுன்னாகத்திலும் அன்றைய தினம் குறித்த காடையர் கும்பல் தீ வைத்து பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டது இதேவேளை நூலகம் எரிவதை இரு அமைச்சர்களும் யாழ். விருந்தினர் விடுதியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்ததாகவும், பின்னர் இச்செயல் குடித்த ஒரு சில நபர்களின் வன்முறை என்று கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது .

அது மாத்திரமின்றி, அப்போது யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய வி.யோகேஸ்வரனின் இல்லமும் தீ வைத்து அழிக்கப்பட்டது. இதே வேளை மறுநாள் ஜீன் முதலாம் திகதி சம்பவம் தொடர்பில் நேரில் கண்ட பலரும் பொலிஸாரும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் கூடிய சீருடையினரும் சேர்ந்தே யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு தீ வைத்து முற்றாக அழித்ததாக கூறினர் எனினும் அரசாங்கம் எதனையும் கருத்தில் வாங்கிக் கொள்ளவில்லை .

பின்னர் ஜீன் 2ஆம் திகதியே அவசர காலச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது, அந்த நேரத்தில் முக்கிய இலக்குகள் யாவும் அழிக்கப்பட்டு விட்டன. அரசாங்கத்தின் காலதாமதமான நடவடிக்கையும் யாழ்ப்பாணம் எரிய காரணமானது என்று மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர் .

இந்த கொடூர செயல் உலகம் முழுவதும் வாழும் அனைத்து இன மக்களாலும் வெகுவாக விமர்சிக்கப்பட்டது. இன ரீதியான தாக்குதல் என்று கடுமையாக விமர்சித்தனர். இந்த கொடூர செயலுக்கு 2016இல் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மன்னிப்பு கோரியிருந்தார் . இருந்த போதிலும் அது ஆழமாக தமிழர் மனங்களில் ஏற்படுத்தியிருக்கும் ரணங்களை மாற்றுமா? என்று எதிர்பார்க்க முடியாது. காரணம் தமிழ் மக்களின் கலாசாரங்களை அழித்தொழிக்கும் வகையிலும், இன மோதல்களுக்கு தூபம் இடும் வகையிலும் வாழ்விடங்களை கபளீகரம் செய்யும் வகையிலும் பௌத்த மத தலங்களை தமிழர்களின் பூர்வீக காணிகளில் அமைக்கும் வகையிலும் ஆக்கிரமிப்புகள் தொடர்கின்றன. குறிப்பாக வடக்கில் அண்மைய காலமாக திட்டமிட்ட ஒரு பிரிவினரால் இனங்களுக்கிடையே கலவரத்தை தூண்டி மீண்டும் ஒரு கருப்பு ஜீலைக்கு வழி வகுப்பதாக கூறப்படுகின்றது .

நாட்டை மீண்டும் அழிக்கவும், அரசாங்கத்தை உடைக்கவும் சர்வதேச மற்றும் உள்ளூர் சக்திகள் முனைவதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார். இவ்வாறான முயற்சியில் ஈடுபடும் குழுக்களுக்கு வெளிநாடுகள் ஆதரவளித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார் .

இதனிடையே, நாட்டில் மத முரண்பாடுகளை தூண்டும், அமைதியை சீர்குலைக்க எத்தணி க்கும் தனிநபர்கள் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களை ஒடுக்கவும் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தவும் ஒரு போதும் தயங்கப் போவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது .

இவை அனைத்துக்கும் மேலாக மக்கள் மத்தியில் இன, மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்தி அமைதியையும் சமாதானத்தையும் சீர்குலைப்பதற்கு அரசாங்கம் இனி ஒருபோதும் இடமளிக்காது என அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார் ,

இவ்வாறாக அரச தரப்பினர் கூறி வருகின்ற போதிலும் ஒரு சில கசப்பான சம்பவங்கள் தொடரவே செய்கின்றன. அதனால் இனங்களுக்கிடையே புரிந்துணர்வற்ற தன்மையே மேலோங்கி வருகின்றது . குறிப்பாக, சில அடிப்படை மதவாதிகள் மற்றும் சில கடும் போக்கு கொண்ட பாராளுமன்ற பிரதிநிதிகள், பெரும்பான்மை மக்களை கவரும் வகையிலும், அரசியல் நோக்கங்களின் அடிப்படையிலும் மக்களை உசுப்பேற்றி விடும் நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான போக்குகள் முடிவுக்கு வரும் வரை நாட்டில் இன ரீதியான கசப்புணர்வுகள் மற்றும் மோதல்கள் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்க முடியாது. அந்த வகையில் வழங்கப்படும் உறுதிமொழிகள் யாவும் வெறும் கண்துடைப்பாகவே பார்க்க வேண்டியுள்ளதாக தமிழ் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர் .



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

27 மே 2023 முதல் 02 யூன் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜா இராஜேந்திரராஜா

மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.நல்லூரை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இராஜா இராஜேந்திரராஜா அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 20 மே 2023 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராஜா இராஜேந்திரராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லப்பா பாலசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 31 மே 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி

வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 08 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரேது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம்

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், லண்டன், மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும கனடா மிஸிசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 08 யூன் 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 28வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களது 28வது ஆண்டு நினைவு நாள் 05 யூன் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவஞ்சலிகள்





### திரு செல்லையா சோமசுந்தரம்
### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 10 யூன் 2023 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளனர். திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




19 மே 2023 வெள்ளிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




20 மே 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமஸ்கந்தன் வர்ஷிகா தம்பதிகளின் செல்வப் புதல்வி அஞ்சனாவின் பூப்புனித நீராட்டு விழாவாகும். அன்றையதினம் செல்வி அஞ்சனா அவர்கள் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




20 மே 2023 சனிக்கிழமை மானிப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.நல்லூரை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இராஜா இராஜேந்திரராஜா அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 மே 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சனார்த்தனன் சந்தோஷனா இணையர்கள் இல்லறத்தில் இணையும் நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 27 மே 2023 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




28 மே 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி விஜயஸ்ரீ ராமதாசன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி விஜயஸ்ரீ ராமதாசன் அவர்கள் தனது குடும்பத்தினர் மற்றும் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




31 மே 2023 புதன்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


RG Education Centers
Established in 1991
ஆர். ஜி. கல்வி நிலையம்
PAR EXCELLENCE

பாலர் வகுப்பு முதல் உயர்நிலை வகுப்புகள் வரை அத்தியாவசிய கல்வித் தேவைகளுக்கு

3852 FINCH AVE EAST, SUITE 401
(One Block West of Kennedy)
Scarborough

தகவல் பெற உங்கள் பெயர், தொடர்பு இலக்கம் பதிவு செய்ய
416-609-9508 அல்லது 416-396-3224
email: info@rgeducation.com
மேலதிக விபரங்கட்கு www.rgeducation.com

Scan for Online Booking

# PREMIER DIAGNOSTIC NETWORK

PDXN

**647•660•0699**
www.pdxn.ca

# RADIOLOGY & CARDIOLOGY SERVICES

## எங்களுக்காக நாங்கள்!

**தமிழர்களின் நிர்வாகத்தில் நகரின் மத்தியில் நல்லதோர் மருத்துவ பரிசோதனை நிலையம்!**

ரேடியோலஜி, மற்றும் கார்டியோலஜி பரிசோதனைகளிற்காக நீங்கள் பரிந்துரைக்கப்பட்டால், ஆற்றலும், அனுபவமும் மிக்க நிபுணர்களின் சேவைகளை பெற்றுக்ககொள்ள தமிழர்களின் நிர்வாகத்தில் நடாத்தப்படும் எங்களின் சேவைகளை நாடுங்கள்.

**தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்**

**647-494-9909**

- X-RAY
- ULTRASOUND
- BONE DENSITY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- ABPM (24H BLOOD PRESSURE MONITORING)

## PREMIER RADIOLOGY CLINICS

### BELLESMERE X-RAY, ULTRASOUND & BMD

North of Ellesmere & Bellamy

**1920 Ellesmere Road, Suite 311 & 311A**
Scarborough, ON M1H 2V6
Tel: **416-289-2280**
Fax: **416-289-7321**

### BRIMLEY X-RAY, ULTRASOUND & BMD

South of Brimley & Sheppard

**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7
Tel: **416-299-7677**
Fax: **416-299-7948**

Access & Share Your Imaging and Reports Online: **https://pdxn.ca/page/patient-imaging**

## PREMIER CARDIAC CLINICS

Tel: **416-289-3212** • Fax: **416-289-0815**

### BELLESMERE CARDIAC CLINIC

North of Ellesmere & Bellamy
**1920 Ellesmere Road, Suite 307**
Scarborough, ON M1H 2V6

### BRIMLEY CARDIAC CLINIC

South of Brimley & Sheppard
**2020 Brimley Road**
Scarborough, ON M1S 4R7

## ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario

Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario

Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN

Accredited Ultrsound Training Program: Accreditation Canada

Infection Control and Cleaning Process by: Public Health Ontario

## FUNDED BY

Ontario Ministry of Health & Long Term Care

"கனடா இந்து" வழங்கும் துர்க்கேஸ்வர மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவுக்கான சிறப்பிதழ்

# துர்க்கேஸ்வரத்தில் மஹாகும்பாபிஷேகம்

## 18-6-2023 ஞாயிறு காலை 6.00 மணி முதல்



## துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் தேவஸ்தானம்
## ஐந்து தள ராஜகோபுரத்துடன் புதிதாய் புனர்நிர்மாணம்

### துர்க்கேஸ்வரத்தில் பக்தர் நிகழ்த்தும் தீபஸ்தாபனத்துடன் கூடிய தீபலட்சுமி பூஜை 16-6-2023 வெள்ளி

பாலரூபத்தில் ஸ்தாபிக்கப்பெற்று பாலாலயத்தில் வீற்றிருக்கும் தெய்வ சக்திகளை, கிரியைகள் மூலமாகவும் மத்திரபூர்வமாகவும் வியாபகமாக்கி, 48 தினங்கள் மந்திரங்களாலும் கிரியைகளாலும் பூஜிக்கப்பெற்ற சக்தி வாய்ந்த யந்திரங்களுடன் ஒன்று சேர்த்து, புதிதாக புனருத்தாரணம் செய்த ஆலயத்தினுள் வரவழைக்கும் போது, முதலாவதாக செய்யப்பெறும் தீபஸ்தாபனம் மேன்மைமிக்கது. சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் இணைந்து இவ்வழிபாட்டினைச் செய்யவுள்ளனர். பொதுவாக வரலட்சுமி விரத தினத்தில் பக்தர்கள் திருவிளக்குப் பூஜை செய்வார்கள். ஆனால், தீபஸ்தாபனத்தின் போது, தீபலட்சுமிக்கு பூஜையும் அத்துடன் தீபங்களை புதிய ஆலயத்தில் ஸ்தாபிக்கும் பேறும் கிடைக்கின்றது.




ரொறன்ரோ, துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலின் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவானது எதிர்வரும் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. கனடாவில் முதன் முதலாக 48 தின யந்திர பூஜையுடனும் 12 தினம் கிரியைகளுடனும் 12 கால யாகத்துடனும் 48 தின மண்டலாபிஷேகத்துடனும் இந்த மஹாகும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது. பல்வேறு நாடுகளில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு திருக்கோவில்களில் இருந்து சிவாச்சாரியர்கள் வருகை தருகின்றனர். ஆயிரக்கணக்கான மஹாகும்பபி'கங்களை உலகெங்கும் நிகழ்த்திய பிள்ளையார்பட்டி டாக்டர். கி.பிச்சைக் குருக்களின் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது

### யந்திரபூஜை ஏப்பிரல் 21ம் திகதி ஆரம்பமாகி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர், சிக்கல் சிங்கார வேலவர், திருச்சி பூமிநாதர், நெடுங்குடி கைலாசநாதர் போன்ற ஆலயங்களில் வழிபடப்பெற்று குருமார்களின் ஆசிகள் பெறப்பெற்று, கனடா வந்தடைந்த "யந்திரங்களுக்கு" துர்க்கேஸ்வரத்தில் விஷேட குருமார்கள் தினமும் பகலும் இரவும் பூஜைகள் நடாத்தி வருகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகங்களின் கீழே வைக்கப் பெற்று அருட்சக்தி வழங்கும் சக்திமிகு உலோகத் தகடுகளால் யந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மிக நேர்த்தியாகவும் பக்திபூர்வமாகவும் நிகழும் யந்திரபூஜையை தரிசித்து பக்தர்கள் அருள்பெற்றுவருகின்றனர்.

## யூன் 7ம் திகதி
### மஹாகும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்

7-6-2023 புதன் கிழமை காலை 8.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தின் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பிக்கின்றன. முக்கிய அம்சமாக ஏழுவகையான ஹோமங்களை நிகழ்த்தவுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 7-6-2023 | காலை | கணபதி ஹோமம் |
| 7-6-2023 | மாலை | மஹாலட்சுமி ஹோமம் |
| 8-6-2023 | காலை | நவக்கிரக ஹோமம் |
| 9-6-2023 | காலை | ஸ்கந்த ஹோமம் |
| 10-6-2023 | காலை | நவதுர்க்கா ஹோமம் |
| 10-6-2023 | மாலை | பிரத்தியங்கராதேவி ஹோமம் |
| 11-6-2023 | மாலை | ஸ்ரீவித்யா ஹோமம் |

ஒவ்வொரு ஹோமமும் ஒவ்வொரு தனிச்சிறப்பு உடையவை. அவற்றின் தரிசனமும் பங்கேற்பும் மகத்துவம் வாய்ந்தவை. அவற்றில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஹோமத்தினையும் பல குருமார்கள் இணைந்து செய்யவுள்ளனர். காலையில் நிகழும் ஹோமங்கள் காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும். மாலையில் நிகழும் ஹோமங்கள் மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.

### மஹாகும்பாபிஷேக யாகபூஜை யூன் 12ம் திகதி முதல் யூன் 18ம் திகதி வரை

துர்க்கேஸ்வரம் திருக்கோவிலின் மஹாகும்பாபிஷேக யாகபூஜைகள் 12-6-2023 திங்கட்கிழமை மாலை 5:00 மணிக்கு அங்குரார்ப்பணத்துடன் ஆரம்பமாகின்றது. அன்று மாலை முதல் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை காலை வரை காலையும் மாலையுமாக 12 காலங்கள் யாகபூஜை தினமும் நடைபெற உள்ளது. ஒவ்வொரு யாகபூஜையின் போதும் விஷேட திரவ்விய ஹோமத்திலும் நவசக்தி அர்ச்சனையிலும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று அருள்பெறவுள்ளனர். யாகபூஜைகளின் தரிசனம் மட்டுமன்றி ஹோமப்புகை சுவாசம், மற்றும் பங்கேற்புக்களும் மகத்துவம் வாயந்தவை.

### 18-6-2023 ஞாயிறு

**அதிகாலை 4:00 மணி முதல் காலை 6:00 மணி வரை**

12ம் கால யாக பூஜை, ஸ்பர்சாஹுதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேத, ஸ்தோத்ர, திருமுறை பாராயணம், யாத்திராதானம், கும்பங்கள் (கடங்கள்) வீதிவலம் முதலியன

**காலை 6:30 மணிக்கு விமான (ஸ்துாபி) கும்பாபிஷேகம்**

**காலை 7:00 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம்**

**காலை 7:28 மணி முதல் காலை 7:40 மணிக்குள்**
மஹாகணபதி, ஸ்ரீதுர்க்காதேவி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்கும்

**மஹாகும்பாபிஷேகம்**

தொடர்ந்து தசதர்சனை, யஜமானபிஷேகம், மஹாபிஷேகம் விஷேடபூஜை, தீபாராதனை, அர்ச்சனைகள் முதலியன

**பகல் 12:30 மணிமுதல் அன்னதானம் வழங்கப்படும்**

**மாலை 5:30 மணி முதல் இரவு 10:00 மணி வரை**

சாயரட்சை பூஜை, விஷேட இசை நிகழ்ச்சி, வசந்தமண்டப பூஜை, விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்

### துர்க்கேஸ்வரத்தில் இரண்டு தினங்கள் எண்ணெய்க்காப்பு யூன் 16, 17ம் திகதிகளில்

மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு கிரியையிலும் பெரும் அர்த்தங்களும், சிறப்புக்களும் உண்டு. அவற்றில், விஷேட மகத்துவம் கொண்ட ஒரு கிரியை "எண்ணெய்க்காப்பு" என்று அழைக்கப்படுகின்ற தைலாப்பியாங்கம். அடியார்கள் கர்ப்பக்கிரகத்தினுள் சென்று தம் கரங்களால் தர்ப்பைப் புல் எடுத்து எண்ணெய்யில் தொட்டு, இறைவனினின் திருவுருவங்களுக்கு சாத்தி வழிபடுதலையே எண்ணெய்க்காப்பு என அழைப்பர். பொதுவாக, சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே கர்ப்பக்கிரகத்தினுள் செல்லவோ, இறைஉருவங்களைத் தொடவோ, அபிஷேகிக்கவோ உரிமை உண்டு. ஆயினும், மூலஸ்தானத்துக்குள் செல்வதற்கோ அல்லது இறையுருங்களைத் தொடுவதற்கோ எந்தவொரு நாளிலும் கிடைக்காத பாக்கியம் பக்தர்களுக்கு கிடைக்கின்ற ஒரேயொரு சந்தர்ப்பம் மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வாகும். இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது புதிய ஆலயம் அமைக்கும்போதோ மட்டும் கிடைக்கும். அன்றைய தினம், பக்தர்கள் தர்ப்பையில் எண்ணெய்யைத் தொட்டு, இறைவனின் கண், மூக்கு, செவி, தொப்பிள், பாதம் முதலிய சகல அங்கங்களும் குளிரும்படி சாத்த வேண்டும்.

பக்தர்களின் வசதி கருதி, துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தில் இரு தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.





## கனடாவில் நிகழும் மாபெரும் வழிபாடு

உ
சிவமயம்

கனடா ஒஷாவா
ஸ்ரீ சொர்ணாகர்ஷண ஞானவைரவசுவாமி
திருக்கோவில்

# அஷ்டபந்தன
# நூதன மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்





### இறை வணக்கம்
ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை
பொன்னம்பலவன் ஞானகுரு வாணி
பதம் நாடு

### உலக மாதா பிதா துதி
வாகர்தாவிவசம்பிறுக்தெளவாகர்தப்
பிரதிபக்தயெ ஜகதப்பிதரௌ
வந்தெ பார்வதீ பரமேஸ்வரௌ

### ஞானவைரவர் துதி
பரமனைமதித்திடாப்பங்கயாசனன்
ஒருதலைகிள்ளியேயொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங் கொண்டுதண்டமுன் புரிதரு வடுகனைப்
போற்றிசெய்குவாம்

சகலவளங்களும் நிரம்பியதும் பல்லினமக்கள் நலமாகவும் ஒற்றுமையாகவும் தத்தமது கலைகலாசாரங்களை பேணிப் பாதுகாத்து வாழும் நாடாகிய கனடாநாட்டில் நமது சைவசமயத்தை பின்பற்றிவாழுவதற்கு ஏற்றவகையில் ஸ்ரீ ஞானவைரவபெருமானின் பக்தர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க கனடாநாட்டில் முதன்முதலாக ஸ்ரீ ஞானவைரவபெருமானை மூலமூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யதிருவருள் கைகூடியுள்ளது.
காவல்தெய்வமான வைரவரை பாரம்பரியமாக வழிபட்டு வந்த அடியார்கள் பலரின் வேண்டுகோளிற்கு இணங்க விநாயகர் முதலானபரிவார மூர்த்திகளுடன் கூடிய ஸ்ரீ சொர்ணாகர்ஷன ஞானவைரவபெருமானுக்கு புதிய ஆலயத்தில் நிகழும் மங்களகரமான சோபகிருதுவருஷம் வைகாசிமாதம் 24 ஆம் நாள் (07-06-023) புதன்கிழமையும் கிருஷ்ணசதுர்த்தி திதியும் உத்தராடநட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபதினத்தில் அதிகாலை 05.00 மணிமுதல் 05.40 மணிக்குள் வரும் ரிஷப லக்கின (கோதூளிகா) சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதினால் அடியார்கள் வந்து தரிசித்து அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகிறோம்.
சுபம்.

இவ்வண்ணம் சிவப்பணியில் நிற்கும்
ச. சர்வசொருபன் ச.ஈஸ்வரரூபன்

**The Sanatana Dharma Society of Gnana Bhairavar**
450 Taunton Rd E, Oshawa, ON, L1K 1A8
Phone - 647-351-6757/ 416-520-2056 | www.gnanabhairavar.ca | Email: gnanabhairavar@outlook.com

உ
சிவமயம்

பிரதிஷ்டா குரு
சிவாகமஞானசாகரம் வாழ்நாள் சாதனையாளர்
டாக்டர் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்த சிவாச்சாரியார்
(Founder Modern Hindu Culture Org)
(சிவாகம ஆலோசகர், ரொறன்ரோ ஸ்ரீ வரசித்திவிநாயகர் தேவஸ்தானம்)

ஆலய பிரதமகுரு
ஆலயபிரதமகுரு "சிவாச்சார்ய மாமணி" "சகலகலா வித்தகர்"
சிவஸ்ரீ வைத்தியநாத சர்வேஸ்வரகுருக்கள்

கும்பாபிஷேக சிவாச்சாரியார்கள்

| | | | |
|---|---|---|---|
| சாதக சிவாச்சார்யார் பிரதிஸ்டா மகோற்சவ பூஷணம் சிவாகம ரத்னா | சிவாகம ரத்தினம் சிவாகம பூஷணம் | சிவாச்சார்ய ரத்தினம் "சிவாச்சார்யமணி" | ஆலய உதவிக் குரு "சிவாச்சார்யமணி" |
| சிவஸ்ரீ கிருஷ்ண பங்குசக்குருக்கள் | சிவஸ்ரீ வைத்தியநாத உதயகுமாரகுருக்கள் | சிவஸ்ரீ பரமானந்த வாசுதேவக்குருக்கள் | சிவஸ்ரீ வைத்தியநாத ஜெனார்த்தன சர்மா |
| (பிரதமகுரு ஸ்ரீகனடா கந்தசாமி தேவஸ்தானம்) | (கல்கரி ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கோவில்) | (B.A.Hons) | |

கும்பாபிஷேகம் நனிசிறக்க நல்லாசி வழங்குபவர்கள்
நல்லை ஸ்ரீ திருஞான சம்பந்தர் ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (2-ஆவது குருமஹா சன்னிதானம்)
மஹா கும்பாபிஷேக சர்வபோதகம் சர்வசாதக பூஷணம் சிவாகமக்கிரியாசிரோரத்தினம் ஸஹஸ்ர சந்திர தர்சனர் சிவஸ்ரீ சிவ நிர்த்தனராஜ சிவாச்சாரியார்
மஹா கும்பாபிஷேகத்திற்கு பூரண ஆதரவு நல்குவோர் ரொறன்ரோ கனடா கந்தசுவாமி கோவில் நிர்வாகசபையினர்
கனடாவில் உள்ள அனைத்து சிவாச்சார்யார்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

## கிரியா நிகழ்வுகள் விபரம்

**02-06-2023 வெள்ளி**
காலை 05.00 மணி - விநாயகர் வழிபாடு, அனுக்ஞை முகூர்த்தக்கால்நாட்டல். தனபூஜை திரவிய விபாகம்வாஞ்சாகல்ப கணபதி ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம், கிராம சாந்தி-பிரவேச பலி வாஸ்த்து சாந்தி சிற்பாசாரியார் உபசாரம் சிலாவிக்கிரகங்களுக்கு கண்திறத்தல்-தான்யாதிவாசம் ஜலாதிவாசம்
மாலை 04.00 மணி - சயனாரோஹணம் தூபி, தீப, யந்திர, நவர்த்தின ஸ்தாபனம் - பிம்பஸ்தாபனம் அஷ்டபந்தனம்

**03-06-2023 சனி**
காலை 06.00 மணி - பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் ரட்சோக்ன ஹோமம், திசாஹோமம், நவக்கிரஹ யாகம்
மாலை 05.00 மணி - ஸ்ரீ ஸ்ரீனிவாசகப்பெருமாள் - ஸ்ரீ ஆஞ்ஜனேயர் யாகம் ஸ்ரீ சுதர்சன ஹோமம்

**04-06-2023 ஞாயிறு**
காலை 07.00 மணி பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் ஸ்ரீ தட்சிணா மூர்த்தி ஸ்ரீ நாகதம்பிரான் யாகம்
மாலை 05.00 மணி ஸ்ரீ சொர்ணாம்பிகா தேவி சிவசக்தி யாகம்

**05-06-2023 திங்கள்**
காலை 07.00 மணி - சூரிய பூஜை அக்னி ஸங்கிரஹணம் மிருத்ஸங்கிரஹணம் ஸ்ரீ மயிலைக் கந்தசுவாமி யாகம்
மாலை 04.00 மணி - அங்குரார்பணம் ரட்சாபந்தனம் கடஸ்தாபனம் யாகாரம்பம் ஹோமம் காலம்
1 தீபாராதனை வேத திருமுறை உபசாரங்கள்

**06-06-2023 செவ்வாய்**
காலை 07.00 மணி - விசேஷசந்தி யாகபூஜை ஹோமம் காலம் - 2 வேத திருமுறை உபசாரங்கள் பிம்பசுத்தி கௌதுகபந்தனம் ஷடத்துவ நியாசம்
மாலை 04.00 மணி - திருவிளக்கு வழிபாடு யாக பூஜை ஹோமம் - காலம் 3 திரிகண்ட ஸ்பர்சாகுதி வேத திருமுறை உபசாரங்கள்

**07-06-2023 புதன் அதிகாலை 04.00 மணி முதல்**
யாக பூஜை ஹோமம் காலம் - 4 மஹாபூர்ணாகுதி தீபாராதனை வேத திருமுறை உபசாரங்கள்
அந்தர்பலி பஹிர்பலி கும்பங்கள் வீதிப்பிரதட்சிணம்ஸ்தூபி அபிஷேகம் மூலமூர்த்திகள் மஹாகும்பாபிஷேகம் தசதர்சனம்
காலைப்பூஜை தீபாராதனை வேத கீத நிர்த்தன அஞ்சலிகள். ஆலயங்களின் சீர்வரிசை பக்தர்களின் அர்ச்சனை மகேஸ்வரபூஜை
மாலை 04.00 மணி முதல் மஹா அபிஷேகம் மாலைப் பூசை ஸ்ரீ கனகவர்ஷினி சமேத
ஸ்ரீ சொர்ணாகர்ஷண பைரவர் சுவாமி திருக்கல்யாண உற்சவம்

## மண்டலாபிஷேக பூஜை

08-06-2023 வியாழன் முதல் 25-07-2023 செவ்வாய் வரை 48 நாட்கள் தினமும் மாலை 06 மணிக்கு நடைபெறும்
மண்டலாபிஷேக உபயங்களை ஏற்று நடத்த விரும்புவோர்
ஆலய பிரதம குரு சர்வேஸ்வரக்குருக்களுடன் (மோகன் குருக்கள்) தொடர்புகொள்ளவும்
தொ. பேசி இலக்கம் - 416-520-2056 / 647-351-6757

ஆலயம் விமானம் அமைப்பு தலைமை ஸ்தபதி "ஆலய நிர்மாண சிற்பாச்சார்ய திலகம்"
விஸ்வ பிரம்மஸ்ரீ செல்வராசா குணாளன் குழுவினர்கள்
(அதிபர் கனகாலய சிற்பக் கலைக்கூடம் - யாழ் - திருநெல்வேலி/கனடா)
பைரவர் வழிபாடு கைமேற்பலன்

அனைவரும் வருக | சுபம் | திருவருள் பெறுக

# தையிட்டி விகாரை தான் கடைசியா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



தையிட்டி விகாரை திறக்கப்பட்டு விட்டது. நிலத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் ஒரு தரப்பு இது போன்ற விடயங்களைச் செய்ய முடியும். அந்த விகாரை விவகாரத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். அதேசமயம் அந்த விவகாரமானது தமிழரசியலின் இயலாமையை நிரூபிக்கும் ஆகப் பிந்திய எடுத்துக்காட்டுகளில் ஒன்று.

அந்த விகாரை ஒரு விவகாரமாக மாறிய பின் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்திருந்தார். அதன் போது அஸ்திரிய பீடாதிபதி அவரிடம் கையளித்த எழுத்து மூல ஆவணம் ஒன்றின் மொழிபெயர்ப்பு தமிழில் ஊடகங்களில் வெளிவந்தது. அதி, அஸ்கிரிய பீடாதிபதி முக்கியமான சில விடயங்களை அழுத்திக் கேட்டிருக்கிறார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விகாரைகள் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள வரலாற்று சிறப்பு மிக்க வணக்கஸ்தலங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்.

அந்தச் சந்திப்பு நிகழ்வதற்கு கிட்டத்தட்ட பத்து நாட்களுக்கு முன் இம் மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதி தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அதில் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளரும் அழைக்கப்பட்டிருந்தார். அச்சந்திப்பில் தொல்லியல் திணைக்களத் தலைவர், திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விட மேலதிக நிதியை வெளித்தரப்புகளிடமிருந்து குறிப்பாக பௌத்த மத குருக்களிடமிருந்து பெறுவதாகக் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி அதனை எதிர்த்துக் கேள்வி கேட்கின்றார். ஓர் அரச திணைக்களம் அவ்வாறு வெளியில் இருந்து நிதி உதவியைப் பெற முடியாது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அஸ்கிரிய பீடாதிபதி அவ்வாறு நிதி உதவி பெறுவதை அனுமதிக்குமாறு தனது கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

அதாவது சக்தி மிக்க பௌத்த மத பீடங்களில் ஒன்று சிங்கள பௌத்த மயமாக்கலை ஊக்குவிக்கும் விதத்தில் ஜனாதிபதிக்கு எழுத்து மூல ஆவணம் ஒன்றை வழங்கியிருக்கிறது. அதேசமயம் உயர் மட்டத்தில் இல்லாத சில பௌத்த மதகுருக்கள் தையிட்டி விவகாரம் தொடர்பாக தமிழிலும் சிங்களத்திலும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் நயினாதீவு விகாரதிபதியின் கருத்துக்கள் சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் சொல்லப்பட வேண்டியவை.

இலங்கைத்தீவில் மத நல்லிணக்கத்தை பொறுத்தவரை அது பெரும்பான்மையிடமிருந்து தான் தொடங்க வேண்டும். தென்னிலங்கையில் அது சிங்கள பௌத்தர்களிடமிருந்து தொடங்க வேண்டும். தமிழ்ப்பகுதிகளில் அது இந்துக்களிடமிருந்து தொடங்க வேண்டும். ஆனால், அதேசமயம் மேற்படி பௌத்த மதகுருக்களில் ஒருவரான பொகவந்தலாவை ராகுல தேரர் தமிழ் பௌத்தர்களைப் பற்றிக் கதைக்கின்றார். தையிட்டி திஸ்ஸ விகாரை தமிழ் பௌத்தர்களிடம் கையளிக்கப்படும் என்று கூறுகிறார்.தமிழ் பௌத்தம் என்பது தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு கட்டம். ஆனால் இப்பொழுது தமிழ் பௌத்தர்கள் யாழ்ப்பாணத்தில் எத்தனை பேர் உண்டு?

சாதாரண தமிழ் மக்களைப் பொறுத்தவரை பௌத்தம் என்பது ஆக்கிரமிப்பின் குறியீடாகவே பார்க்கப்படுகினறது. தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் ஒரு கால கட்டத்தில் பௌத்தர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது ஒரு வரலாற்று உண்மை. இந்தியாவில் தோன்றிய பௌத்தம் ஆசியா முழுவதும் பரவிய பொழுது அது தமிழ் மக்கள் மத்தியிலும் பரவியது. தமிழின் காப்பிய காலம் எனப்படுவது சமண பௌத்த காலம் தான். தமிழில் உள்ள ஐந்து காப்பியங்களும் ஒன்றில் பௌத்த காப்பியங்கள் அல்லது சமண காப்பியங்கள்தான். பின்னர் நாயன்மார்களின் எழுச்சியோடு சைவம் பௌத்தத்தை வெற்றி கொண்டது. மதங்களுக்கிடையிலான பூசல்களும், அனல்வாதம் புனல் வாதம் போன்றவற்றில் பிற மதத்தவர்



களை வென்றதும் தமிழ் வரலாற்றின் ஒரு பகுதி. அது போலவே தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறியதும் இஸ்லாமியர்களாக மதம் மாறியதும் தமிழ் வரலாற்றின் ஒரு பகுதி.

தமிழ் அடையாளம் ஒரு மதத்துக்கு மட்டும் உரியதல்ல என்று அறிஞர்கள் கூறுவர். பூர்வ காலங்களில் தமிழர்கள் இயற்கையை வழிபட்டார்கள். அதன் பின் சமணமும் பௌத்தமும் தமிழ் மக்கள் மத்தியில் பரவின. அதன்பின் பக்தி இலக்கியம். அதன் பின் கிறிஸ்தவம், இஸ்லாம். அதன் பின் ஈழத்தில் ஆயுதப் போராட்டமும் அதன் விளைவாக ஏற்பட்ட புலப்பெயர்ச்சியும். இப்படியாக பூர்வ காலங்களில் தொடங்கி இன்று வரையிலும் தமிழ் அடையாளத்தை வெவ்வேறு மதங்கள் செதுக்கியிருக்கின்றன. வெவ்வேறு கோட்பாடுகள் செதுக்கியிருக்கின்றன. வெவ்வேறு நம்பிக்கைகள் செதுக்கியிருக்கின்றன. ஈழப் போராட்டம் செதுக்கியது. புலப்பெயர்ச்சி செதுக்கியது. புலப்பெயர்ச்சி தமிழர்களை தாயகத்துக்கு வெளியே சிதறடித்து விட்டது. அதனால் தமிழ் அடையாளம் எனப்படுவது சில அறிஞர்கள் சுட்டிக் காட்டுவது போல எல்லை கடந்த ஓர் அடையாளம். அது ஓர் அரசியல் எல்லைக்குள் குறுக்கப்பட முடியாத அனைத்துலக அடையாளம்.

குறிப்பாக கீழடி ஆய்வுகள் இந்திய வரலாற்றை தமிழில் இருந்து தொடங்கத் தேவையான சான்றுகளை வெளிக்கொண்டு வருவதாக அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். எனவே தமிழர்கள் தமதுமொழியின் தொன்மை மற்றும் அனைத்துலக இருப்பைக் குறித்துப் பெருமைப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்தால், ஒரு காலம் தமிழில் பௌத்தம் நிலவியது என்பது வரலாற்று உண்மை.

ஆனால் பௌத்தம் ஒரு மதமாக இருக்கும் வரை பிரச்சனை இல்லை. அது ஒரு இனத்தின் ஆக்கிரமிப்புத் தத்துவமாக, ஆக்கிரமிப்பின் கருவியாக மாறும் பொழுதுதான் பிரச்சினையே வருகிறது. இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையே அது தான். மதம் மொழி இனம் நிலம் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட தம் மதுவீப கோட்பாடு அதுவென்று மு. திருநாவுக்கரசு கூறுகிறார்.

சிங்கள பௌத்தம் ஓர் ஆக்கிரமிப்புக் கொள்கையாக மாறிய பின் அது தமிழ் பௌத்தத்தை கையில் எடுத்தால் அதுவும் ஓர் ஆக்கிரமிப்பு உத்தி என்றுதான் தமிழ்மக்கள் பார்ப்பார்கள். சிங்கள பௌத்தமானது ஏனைய மதங்களின் இருப்பை அங்கீகரிக்குமாக இருந்தால் குறிப்பாக யாப்பில் இப்பொழுது சிங்கள பௌத்தத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் முன்னுரிமையை நீக்கி இலங்கைத்தீவின் மதப்பல்வகைமையை ஏற்றுக் கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்கச் சிங்கள அரசியல்வாதிகள் தயாரா? இங்கு பிரச்சனை மதப் பல் வகைமை அல்ல மத மேலாண்மைதான். சிங்கள பௌத்தம் ஒரு மத மேலாண்மைக் கோட்பாடு என்பது தான்.

ஆதித் தமிழ் பௌத்தர்கள் பெருமளவுக்கு மகாயான பௌத்தத்தை சேர்ந்தவர்கள் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அதே சமயம் சிங்கள பௌத்தர்கள் தாங்கள் பின்பற்றுவது தேரவாத பௌத்தம் என்று கூறிக் கொள்கிறார்கள். ஆனால் தென்னிலங்கையில் பிரயோகத்தில் இருப்பது மகாயான பௌத்தந்தான் என்று பேராசிரியர் கணணாத் ஒபயசேகர கூறுகிறார். தேரவாத பௌத்தத்துக்கும் மகாயான பௌத்தத்துக்கும் இடையிலான முரண்பாடுகளின் போது இலங்கை வரலாற்றில் மன்னர்களின் காலத்தில் கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. மகாயான பௌத்தம் அதிகம் இந்து மதப் பண்புகளை உள்வாங்கியது என்றும், இலங்கைத்தீவில் உள்ள மகாயான, தேரவாத பௌத்த பிரிவுகளுக்கு இடையிலான முரண்



பாடுகளை இன ரீதியாகவும் வியாக்கியானம் செய்யலாம் என்றும் கூறும் அறிஞர்கள் உண்டு.

இவ்வாறான அரசியல்,பொருளாதார, இராணுவ,மத கலாச்சாரப் பின்னணிக்குள் சில பௌத்த மத குருக்கள் தமிழ் பௌத்தத்தைப் பற்றிக் கதைப்பதனை தமிழ் மக்கள் சந்தேகத்தோடு தான் பார்ப்பார்கள்.மேற்படி பிக்கு கூறுகிறார் கட்டப்பட்ட விகாரைகளை இடிக்க முடியாது என்று. ஒரு நிலத்தை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு அதில் விகாரைகளைக் கட்டிவிட்டு அதன் பின் விகாரைகளை இடித்தால் அது மத நல்லிணக்கத்தை குழப்பி விடும் என்று கூறுவது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் ஒரு தர்க்கம்தான்.தையிட்டியில் மட்டுமல்ல தமிழ் பகுதிகளில் இப்பொழுது தமிழ் பௌத்தர்கள் ஒரு சமூகமாக இல்லை. தமிழ்ப் பகுதிகளில் சிங்கள பௌத்தர்களான படைத்தரப்புத் தான் ஆயுதங்களோடு குந்தியிருக்கின்றது. தமிழ் மக்கள் அவர்களை ஆக்கிரமிப்பு படையாகத் தான் பார்க்கின்றார். ஒரு மதத்தின், ஒரு இனத்தின் மேலாண்மையை பாதுகாக்கும் ஒரு படையாகத் தான் பார்க்கின்றார்கள். இன, மதப் பல்வமையைப் பாதுகாக்கும் ஒரு படையாகப் பார்க்கவில்லை. எனவே இந்த நாடு இன மதப் பல்கைமையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்கட்டும். அப்பொழுது தமிழ் பௌத்தம் ஒரு பிரச்சினையே இல்லை.

இப்பொழுது மீண்டும் தையிட்டி விகாரைக்கு வருவோம். இந்த விடயத்தில் மேற்சொன்ன சில அதிகார மற்ற பிக்குக்கள் சொல்லும் கருத்துக்களை விடவும் அதிகாரம்மிக்க அஸ்கிரிய பீடாதிபதியின் கருத்துக்களே அரசியல் பரிமாணமுடையவை. அப்படிப் பார்த்தால் தாமரை மொட்டு கட்சியின் பிரதிநிதியாகக் காணப்படும் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்புக்களே தெரிகின்றன.

அடுத்த ஆண்டு இறுதியில் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அப்பொழுது எதிரணியின் ஒரு பொது வேட்பாளராக சம்பிக்க ரணவக்க நிறுத்தப்படலாம் என்ற ஊகங்கள் உண்டு. சம்பிக்க சிங்கள பௌத்தர்களைக் கவரக்கூடியவர். அதேசமயம் அரகலய போராட்டத்தின் பங்காளிகளிலும் ஒருவர். எனவே அவரை எதிர்கொள்வது என்றால் ரணில் விக்கிரமசிங்க சிங்கள பௌத்தர்களைக் கவர வேண்டும். அதோடு ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளை ஏற்பதால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய எதிர்ப்பலைகளைத் திசை திருப்பவும் அது உதவும். அதாவது அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நோக்கித் தான் அவர் உழைக்கின்றார். சிங்கள பௌத்தத்தின் காவலனாக அவர் தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மேற்கத்தைய உடுப்புகளையணிந்து, மேற்கத்திய பாரம்பரியத்தைப் பின்பற்றும் ரணில், பாரம்பரிய உடையணிந்து சிங்கள பௌத்த கடும் போக்காளர்களைப் பிரதிபலிக்கும் சம்பிக்க ரணவக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். அதற்கு ஒரே வழி சிங்கள பௌத்தர்களைத் திருப்திப்படுத்துவது தான். அப்படிப் பார்த்தால் தையிட்டி விகாரை இறுதியானது அல்ல என்று எடுத்துக் கொள்ளலாமா?

# கிளிநொச்சி:-
# நேற்று - இன்று - நாளை

இரண்டு துண்டாகிக் கிடக்கிறது, கிளிநொச்சி. இந்தப் போக்குத் தொடருமாக இருந்தால் கிளிநொச்சியின் எதிர்காலம் நிச்சயமாகப் பாழாகி விடும். இதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டும் தெரியாததைப் போலப் பேசாமலிருக்கிறார்கள் பலரும். அதிலும் படித்தவர்களும் சிந்திக்கக் கூடியவர்களும் இதைக் கண்டும் காணாதிருப்பது பெரிய பிழை. இதிலே அணிகளுக்குள் சிக்கிக் கொண்டவர்கள், தங்கள் ஆற்ற




லையும் ஆளுமையையும் இழந்து போய் நிற்கிறார்கள். அணிகளுக்குள் சிக்காதவர்கள் எதையும் சரியாகச் செய்ய முடியாமல், திக்கு முக்காடுகிறார்கள். கிளிநொச்சியை விட்டுச் சென்றால் தான் எதையாவது உருப்படியாகச் செய்ய முடியும் என்று சிலர் யோசிக்கிறார்கள்.... அந்தளவுக்கு கிளிநொச்சியின் அரசியல் நிலவரம் உள்ளது • இப்படிச் சொல்லிக் கவலைப்படுகிறார் கிளிநொச்சியைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர்.

ஏறக்குறைய இதை ஒத்த நிலையில் தன்னுடைய அவதானத்தைச் சொல்கிறார் கிளிநொச்சியில் உள்ள கிறிஸ்தவ மதகுரு ஒருவர். கிளிநொச்சியைக் கட்டியெழுப்புவதைப் பற்றிச் சிந்திப்பதற்குப் பதிலாக, இங்குள்ள ஆட்களையும் சமூகத்தையும் எப்படித் தமக்கேற்ற மாதிரித் துண்டாடலாம் என்று தான் சிந்திக்கிறார்கள். இதனால் ஒவ்வொருவரும் தனித் தனியாகத் அறுத்துத் துண்டாடப்படுகின்றனர். இப்பொழுது கிளிநொச்சியே தனித்தனித் துண்டுகளாகச் சிதறிக் கிடக்கிறது. இதனால் இங்கே (கிளிநொச்சியில்) எதையும் ஒருங்கிணைந்தும் செய்ய முடியாது. உருப்படியாகவும் செய்ய முடியாது. இது நல்லதில்லை என்று கவலைப்படுகிறார் அவர். என்னுடைய அவதானமும் கவலையும் கருத்தும் இதேதான்.

இதைப் பற்றி தொடர்ச்சியாகப் பல இடங்களிலும் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன் வருகிறேன். ஆனாலும் நம்பிக்கை அளிக்கக் கூடிய அளவுக்கு மாற்றங்கள் நிகழக்கூடியதாக இல்லை. என்பதால் இதைக்குறித்து ஆய்வு பூர்மான சில விடயங்களை முன் வைத்து, எதிர்காலக் கிளிநொச்சியை எப்படி மாற்றியமைக்கலாம் என்பதைப் பற்றி எழுதலாம் என்று எண்ணியுள்ளேன்.

இது தொடர்பான எண்ணங்களையும் கருத்துகளையும் நண்பர்கள் முன் வைக்க வேண்டும். அவரவர்களுக்கென்று அரசியல் சார்புகள், இலக்கிய நிலைப்பாடுகள், தனியான சமூகப்பார்வைகள் இருக்கும். இது இயல்பு. மட்டுமல்ல அது அவரவருக்கான உரிமையாகும். ஒரு ஜனநாயகச் சமூகத்தில் அப்படித்தான் இருக்கும். அப்படித்தான் இருக்கவும் வேண்டும். இதை நாம் புரிந்து கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். அப்படி இருந்தால்தான் அது ஜனநாயகச் சமூகமாகும்.

இதை மறுதலிப்பது ஜனநாயக விரோதமாகும். ஜனநாயக விரோதம் என்பது நாகரீகமடையாத பழங்குடி மனோபாவத்தின் வெளிப்பாடு.

பழங்கடி மனோநிலையானது பல் வகைமையை, பன்மைத்துவத்தை இல்லாதொழிக்க முனைவது. பதிலாக அந்த இடத்தில் ஒற்றைப்படைத் தன்மையை நிறுவ முற்பட்டு, பகைமையை வளர்க்க முற்படுவது. அதற்கான நியாயங்களை அது உருவாக்கும். இதற்காகத் தன்னையும் தன்னுடைய தரப்பையுமே முன்னிலைப்படுத்தும் அல்லது அதற்கு முயற்சிக்கும். இதற்காக அது தன்னைப் புனிதமாகவும் மிகச் சரியாகவும் காண்பிக்க முற்படும். அதே அளவுக்கு மற்றவற்றையும் மற்றவர்களையும் தாழ்த்த முற்படும் அல்லது நிராகரிக்கும். அதற்கான காரணங்களை உருவாக்கும் அல்லது சோடிக்கும். இதற்காக அது எவ்வளவு தூரமும் கீழிறங்கிக் கொள்ளவும் தயங்காது. அவதூறு தொடக்கம் நியாயமற்ற வகையிலான நிராகரிப்பு வரையில் எந்தக் கூச்சமுமின்றிச் செய்யும். துரோகி — தியாகி என்ற அடையாளப்படுத்தல்களும் வகை பிரிப்புகளும் இதன் வெளிப்பாடே. செழிப்படைந்த ஜனநாயகச் சமூகத்தில் இந்தச் சொற்களுக்கு எந்த மதிப்பும் கிடையாது. இதைப் படிக்கும் போது உங்களுக்கு இங்கே உள்ள சூழலும் நீங்கள் பார்த்த பார்க்கின்ற காட்சிகளும் மனதில் தோன்றும். பலருடைய முகங்கள் கூடத் தென்படும். ஆனால் இதெல்லாம் வளர்ச்சிக்கும் உலக நடைமுறைக்கும் எதிரானது. மனித மாண்புக்கு இழுக்குச் சேர்ப்பது. என்றாலும் இவர்கள் இதைப் பற்றியெல்லாம் பொருட்படுத்துவதில்லை.

பிற தரப்புகளுக்கு இடமளிக்காமல், சமத்துவத்தையும் பன்மைத்துவத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் ஜனநாயக மறுப்புச் செய்வது தற்கொலைக்கு நிகரானது என்பதை இவர்கள் புரிந்து கொள்வதேயில்லை.

இதிலே வேடிக்கை என்னவென்றால், இதைத்தான் இலங்கை அரசும் சிங்கள இனவாதத் தரப்பும் செய்கின்றன. அதைக் கண்டிக்கின்ற இவர்கள், தமது சூழலில் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் பன்மைத்துவத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. இதற்கொரு எளிய உதாரணத்தைச் சொல்லலாம்.

உள்ளூராட்சி சபைகளிலும் மாகாண சபையிலும் தமக்குக் கிடைத்த பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று செயற்படுகிறார்கள். (வடமாகாண சபையும் வடக்கில் உள்ள பல பிரதேச சபைகளும் இதற்குச் செழிப்பான உதாரணங்கள்) இதனால் பல தவறுகள் நடக்கின்றன. பொருத்தமில்லாத திட்டங்கள். அதனால் ஏற்படுகின்ற தோல்வி. இதைப்பற்றி யாரும் பேச முடியாது. எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் தமக்குள்ள பெரும்பான்மை பலத்தைப் பிரயோகிப்பார்கள்.

இது தானே இலங்கைப் பாராளுமன்றத்திலும் இலங்கையின் ஆட்சியிலும் நடக்கிறது. தமக்குள்ள பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு அதிகாரத்தின் பேரால் தேச விரோத, மக்கள் விரோத ஆட்சி மேற்கொள்ளப்படுகிறது. இதைத் தவறு என்று சொல்லிக் கொண்டு அதே அணுகுமுறையை இங்கும் பிரயோகிக்கலாமா?

இதேவேளை எதிர்த்தரப்புகள் என்னதான் நியாயமான விடயங்களை முன்வைத்தாலும் அவற்றை தமது பெரும்பான்மை பலத்தின் மூலம் நிராகரித்து விடுகிறார்கள். இங்கே நியாயமோ, சரியானது எது என்பதோ, ஜனநாயக அடிப்படையில் பிற தரப்புக்குரிய இடத்தை அளிக்க வேண்டும் என்பதோ பொருட்படுத்தப்படுவதில்லை.

இவ்வளவுக்கும் இது சட்டரீதியானது. ஜனநாயக உரிமையின்பாற்பட்டது. ஆனாலும் தமது கும்பல் மனோபாவத்தினால் காட்டுத்தனமாக நடந்து கொள்கின்றனர். இதைக்குறித்து தமிழ் ஊடகங்களில் அதிகமானவை கண்டு கொள்வதே இல்லை. தமிழ் அரசியலுக்கான வழிகாட்டிகளும் அரசியல் கருத்துரைப்பாளர்களும் கூட இவற்றைக் குறித்துக் கவனம் கொள்ளத் தயங்குகின்றனர்.

இந்தத் தவறுகளின் கூட்டு விளைவே தமிழ் அரசியலின் பின்னடைவும் தமிழ் மக்களின் கூட்டுத்தோல்வியுமாகும்.

அரசியலில் மட்டுமல்ல, கலை, இலக்கியம் மற்றும் சமூகச் செயற்பாடுகள் அனைத்திலும் இந்த ஒதுக்கல் அல்லது பாரபட்சமான — ஜனநாயக விரோதப் போக்கு உள்ளது. இந்த வாரம் ஈழத்தில் உருவாக்கப்பட்ட மதிசுதா என்பவரின் வெந்து தணிந்தது காடு என்ற திரைப் படத்தை ஐரோப்பிய நாடுகளில் வெளியிடுவதற்கான எதிர்ப்பும் தடை நடவடிக்கைகளும் பற்றிய சேதிகள் வந்து கொண்டிருக்கின்றன.



இதெல்லாம் ஜனநாயக வெறுப்புச் சமூகத்தின் குணங்களாகும். இதனால் தமிழ்ச் சமூகத்துக்குப் பின்னடைவே நிகழும். இந்த அடிப்படையில் தான் கிளிநொச்சியும் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. எவ்வளவோ வாய்ப்புகளிருந்தும் அதன் வளர்ச்சி மட்டுப் பட்டுத் தேங்கியுள்ளது. பிற மாவட்டங்களோடு ஒப்பிடும் போது கிளிநொச்சி மாவட்டம் அடிப்படையான வளர்ச்சித் தகமைகளைக் கூட எட்டவில்லை.

குறிப்பாக போர்க்காலத்திற் கூட கிளிநொச்சி இந்தளவுக்குக் சீரழியவில்லை. இப்பொழுது அதன் இயற்கை வளங்களே சொந்த மக்களால் சிதைக்கப்படுகின்றன. அதனுடைய ஆற்று வழித் தடங்கள் மண் அகழ்வினால் கெடுக்கப் படுகின்றன.

போதைப்பொருள் பாவனை, சட்ட விரோத மது உற்பத்தி, ஜனநாயக வெறுப்பு நடவடிக்கைகள், அதிகார துஸ்பிரயோகம், ஊழல், சமூக முரண்பாடுகள் கூர்மைப்படுத்தப்படுவது, அரசியல் பழிதீர்த்தல்கள் என எதிர் நடவடிக்கைகள் பெருகியுள்ளன.

மிக எளிமையாகச் சொன்னால் யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் முடிந்து விட்டது. கிளிநொச்சியில் இன்னும் ஒரு

**கட்டுரையாளர்:**
**கிளிநொச்சியில் இருந்து**
**- கருணாகரன் -**



நல்ல பொதுமண்டபம் கிடையாது. இன்னும் ஒரு முழுநிறைவான இயங்கு நிலையில் உள்ள பொது விளையாட்டரங்கு இல்லை. இன்னும் அரச திணைக்களங்களின் பயன்பாட்டுக்கும் பொதுத் தேவைகளுக்கும் எனப் பயன்படக் கூடிய நிலங்கள் கையகப்படுத்துவது நிற்கவில்லை. (இதிலே செல்வாக்கான கைகள் தான் விளையாடுகின்றன). இன்னும் பெயர் அறியக்கூடிய நிறைவான ஒரு செயற்பாட்டு அமைப்பு கிடையாது. நல்லதொரு நூலகம் இல்லை. இசைக் கல்லூரிகளோ, ஓவியக் கூடங்களோ, தொல்பொருள் சேகரிப்பகமோ இல்லை. நடனப்பள்ளி இல்லை. இந்தத் துறைகளில் பயில விரும்புவோருக்கு எந்த வழியும் கிடையாது. காலாற நடப்பதற்கும் நகரத்துக்கு வருவோர் ஓய்வாக அமர்ந்து பேசுவதற்குமான இடமொன்று கிடையாது. நல்லதொரு பூங்கா இல்லை. வெளியார் யாரேனும் விருந்தாளிகளாக வந்தால், அவர்களை அழைத்துச் சென்று காண்பிக்கக் கூடிய கிளிநொச்சிக்கான அடையாளச் சின்னங்கள் எதுவுமில்லை. ஊடகவியலாளர்களின் கட்டமைப்பு, குறிப்பிடத்தக்க கலை, இலக்கிய மன்றங்கள், அமைப்புகள் என்று எதுவுமில்லை.

இதனால் கிளிநொச்சியில் இருந்து இன்னும் பெயர் குறிப்பிடக் கூடிய ஒரு ஓவியரோ இசைஞரோ இசையாளர் அணியோ உருவாக வில்லை. ஆய்வறிஞர்கள் கிடையாது. கிளிநொச்சியில் படித்து பல்கலைக் கழகங்களில் சில விரிவுரையாளர்கள் உள்ளபோதும் பேர் சொல்லக் கூடிய இன்னும் ஒரு பேராசிரியர் நிலைபெறவில்லை. புகழுடைய சட்டவாளர்களோ, சட்டத்துறை நிபுணர்களோ, புகழ் வாய்ந்த நீதிபதிகளோ உருவாகவில்லை. நிர்வாக அதிகாரிகளும் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் வந்துள்ளனர் என்பது சற்று ஆறுதல். ஆனால் அவர்களும் தனித்துவமாகவும் சுயாதீனமாகவும் செயற்பட முடியாதிருக்கின்றனர். அந்தளவுக்கு அரசியல் நெருக்குவாரங்கள்.

(அடுத்த வாரமும் தொடரும்)

# கனடாவின் தீர்மானமும் ஈழத்தமிழரது அரசியலும்




ஈழத்தமிழரது அரசியல் பிரச்சினை மீண்டும் ஒரு தடவை மேற்குலக நாடுகளால் முதன்மைப்படுத்தப்பட்டு வருகிறது. 2009 களுக்கு பின்னர் அதிக தடவை அத்தகைய முதன்மைப்படுத்தல் நிகழ்ந்துள்ளது. ஆனால் எந்த அடிப்படையிலும் தீர்வுக்கான நகர்வு சாத்தியமற்றதாக விளங்குகிறது. இதனால் மேற்குலகத்தினது உரையாடலை காலத்தை நகர்த்தும் தந்திரோபாயமாக கருதும் நிலை ஈழத்தமிழருக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கு தனித்து மேற்குலகம் மட்டுமல்ல ஈழத்தமிழ் அரசியல்வாதிகளது நலன்களாலும் அத்தகைய இழுத்தடிப்பு காணப்படுகிறது என்ற கருத்து நியாயமற்றதல்ல. இருந்த போதும் உலகளாவிய வல்லரசுகள் மற்றும் அயல் நாடான இந்தியா தமது நலனுக்கு ஈழத்தமிழரை பயன்படுத்துகிறது என்ற விமர்சனத்தை நிராகரித்துவிட முடியாது. இக்கட்டுரையும் அத்தகைய உரையாடலுக்கு கனடாவின் பிரதமரது அண்மைய நகர்வுகளை கொள்ள முடியுமா என்ற கருதுகோளுக்கு விடை தேடுவதாக அமையவுள்ளது.

கனடாவின் அண்மைய காலப்பகுதியில் ஈழத்தமிழருக்கு ஆதரவான தீர்மானங்களை நோக்குவது அவசியமானதாகவுள்ளது. குறிப்பாக போர் முடிந்த பின்னர் கனடாவின் போர்க் குற்றம் தொடர்பில் அதிக நடவடிக்கைகளை முதன்மைப்படுத்த தொடங்கியது. அதற்கான அடிப்படையை கனேடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு கனடிய பழங்குடிகளுக்கு நிகழ்ந்த இனப்படுகொலை தொடர்பான விசாரணையின் முடிபில் பழங்குடிகள் மீது கலாசார இனப்படு கொலை நிகழ்ந்துள்ளதாக அறிக்கையிட்டது. அதன் பின்னர் கனடாவின் நடவடிக்கைகள் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் இனப்படுகொலைக்கு எதிரான தீர்மானங்களை முதன்மைப்படுத்த ஆரம்பித்தது. அதில் ஓரங்கமாகவே ஈழத்தமிழர் மீது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை என்பதை தீர்மானமாக மாநிலங்கள் முன்மொழிய ஆரம்பித்தன. அதனைத் தொடர்ந்து கனேடியப் பாராளுமன்றமும் பிரதமரும் அதற்கான தீர்மானங்களை வெளியிட்டதுடன் அதற்கான நியாயப் பாட்டையும் தெளிவுபடுத்தியுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் அழுத்தங்களைக் கடந்து ஈழத்தமிழர் மீது நிகழ்த்தப்பட்டமை இனப்படுகொலை என்பதை தெளிவுபடுத்தியதுடன் அதற்கான நினைவு நாளான 18ஐ முதன்மைப்படுத்தி அறிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமன்றி இலங்கையின் போர்கால ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷக்ஷ் மற்றும் கோட்டபாய ராஜபக்ஷவு: மீதும் தடை விதித்ததுள்ளமை கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இவை யாவற்றையும் கடந்து முள்ளிவாய்க்கால் நினைவாக தூபி ஒன்றினை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும் என்ற பிரச்சாரம் மேற்கு நாடுகளில் வலுக்கும் போது கனடாவின் மத்திய அரசும் மாநிலங்களும் அத்தகைய கோரிக்கைக்கு முதன்மை கொடுக்க ஆரம்பித்துள்ளன. இவ்வகையான நகர்வுகளை ஏன் கனடா முதன்மையாகக் கொண்டு செயல்படுகிறது என்பது பிரதான விடயமாகும். கனடா ஈழத்தமிழரது அயல்நாடோ கலாசார ரீதியான நெருக்கமான நாடோ கிடையாது. ஆனாலும் ஈழத்தமிழரது மனித உரிமைகளைகள் மீறப்படுவது பற்றியும் இனப்படுகொலை பற்றியும் அதிக முக்கியத்துவம் கொடுத்துவருகிறது.

முதலாவது, உலக அரசியலில் கனடா மனித உரிமைகள் மீறப்படுகின்ற போது அதிக உணர்வையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தியுள்ள நாடாக விளங்குகிறது. அமெரிக்காவில் கறுப்பினத்தவர் கொல்லப்பட்ட போது எழுச்சி பெற்ற வெகுஜனப் போராட்டங்களை எதிர் கொண்ட ஜஸ்மின் ரூட்டோ முளந்தாளிட்டு மன்னிப்புக் கோரியதை நினைவில் கொள்வது அவசியமானது. அவ்வாறே தனது நாட்டில் கொல்லப்பட்ட பழங்கு டியின் சிறுவர்களுக்காக மன்னிப்புக் கேட்டதோடு அதற்கு முறையான சட்ட நடிவடிக்கைக்கும் எடுக்க பணித்துள்ளமையும் நினைவு கொள்ளத்தக்கதாகும். அது மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் வலியுறுத்தும் கனடா உலக அமைதிக்கான நடவடிக்கையில் அதிக அக்கறை கொண்டு செயல்படுகிறது. உக்ரையின் மீதான ரஷ்யாவின் போரை கண்டித்த கனடா உக்ரையினுக்கு பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகளையும் இராணுவ ஒத்துழைப்பினையும் மேற்கொண்டு வருகிறது. இதனடிப்படையில் கனடாவின் கொள்கைகளுக்குட்பட்டு ஈழத்தமிழர் மீது கவனம் கொள்ளும் செய்முறையை கொண்டிருக்க வாய்ப்புள்ளது.

இரண்டு, கனடாவில் ஈழத்தமிழரது தொகை ஏறக்குறைய மூன்றரை இலட்சத்தை கடந்துள்ளதாக தெரியவருகிறது. அதிலும் கனடாவின் முக்கிய நகரங்களையும் அரசியல் தீர்மானமெடுக்கும் நிலையிலும் காணப்படுவதே அவர்களது முக்கியத்துவமாகும். குறிப்பாக ரொரன்றோ, மொன்றியல், வன்கூவர், கலிபக்ஸ் மற்றும் எட்மொன்ரன் போன்ற இடங்களில் அதிகமாக ஈழத்தமிழர் வாழ்கின்றனர். இத்தொகையை விட அதிகமானவர்கள் வாழ்வதாக முருகர் குணசிங்கம் தனது ஆய்வொன்றின் குறிப்பிடுகின்றார்.

இதனால் அரசியல் ஈடுபாட்டை அதிகம் கொண்ட ஈழத்தமிழர் அதற்கான வாய்ப்புக்களை பயன்படத்திக் கொள்வதுடன் அரசியல் கட்சிகளிலும் பாராளுமன்ற தேர்தல் மற்றும் மாநிலங்கள் அவைத் தேர்தல்களிலும் போட்டியிடுகின்றனர். மேலும் ஆளும்தரப்பில் அங்கம் வகிக்கின்ற ஈழத்தமிழர் தேர்தல் முடிபுகளில் தீர்மானம் எடுக்கும் சக்திகளாகவும் விளங்குகின்றனர். இதனால் ஈழத்தமிழருடன் அதிக நெருக்கம் கொண்டுள்ள அரசியல் தலைமைகளையும் அரசியல் கட்சிகளையும் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது.

மூன்று, ஈழத்தமிழர்கள் கடின உழைப்பை உடையவர்களாகவும் பொருளாதாரத் தேடலை அதிகம் கொண்டவர்களாகவும்காணப்படுகின்றனர். அதனால் பாரியளவு முதலீடுகளை செய்வதுடன் உற்பத்தி நுகர்வு ஆகிய இரண்டிலும் கவனம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். ஈழத்தமிழரால் கனடாவுக்கு அதிக இலாபமே அன்றி சுமையாக இல்லாத நிலை பாதுகாப்பானதாக கருத வாய்ப்புள்ளது. அத்தகைய வலுவுக்கு அவர்கள் திரட்சியாக இருப்பதுவும் தொழில் முயற்சிகளில் கூட்டாக தொழில்படுவதும் கனடாவின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்கிறமையும் அடிப்படைகளாகும். இதற்கான காரணம் ஈழத்தமிழர்களில் கனடாவுக்கு புலம்பெயர்ந்த அனேகமானவர்கள் மத்தியதர வர்க்கத்தவர்கள். அவர்களது அரசியல் பொருளாதார சமூக அந்தஸ்த்து தனித்துவமானது. அதற்கமைவாகவே கனடாவின் இருப்போடு சேர்ந்து பயணிக்கக் கூடியவர்கள். குடியேற்ற காலத்திலிருந்து ஈழத்தமிழரின் இயல்பு அன்னிய நாடுகளில் நேர் கணியமாக சேவையாற்றும் திறனுடையவர்கள். அதனால் ஈழத்தமிழருக்கும் கனேடியருக்குமான உறவு சுமூகமானதாக அமைந்துள்ளது. நான்கு, கனடா ஈழத்தமிழரது அரசியலில் அதிக ஈடுபாடு காட்டுவதற்கு பிரதான காரணம் அமெரிக்காவுக்கும் ஈழத்தமிழருக்குமான அரசியலின் முக்கியத்து வமாகும். அத்தகைய முக்கியத்துவம் இந்து சமுத்திரம் சார்ந்து இலங்கைத்தீவு மேற்கொள்ளும் நகர்வுகளாகும்.

கனேடியப் பிரதமரது முள்ளிவாய்க்கால் நினைவு தினத்திற்கான அறிவிப்பும் இனப்படுகொலைக்கான குற்றச்சாட்டும் முன் வைக்கப்படும் போது அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களான றொஸ்,ஜான்சன், நிக்கல், இலினொயிசுக்கான,டேவிஸ் மற்றும் மக்பாத் ஆகியோர் அவ்வறிக்கையினை அமெரிக்க வெளிவிவகார குழுவக்கு வழங்கியிருந்தனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும் என்ற விடயத்தையும் இனப்படுகொலை நிகழ்த்தப் பட்டதென்பதையும் முதன்மைப்படுத்தி அவ்வறிக்கை அமைந்திருந்தது. இத்தகைய செய்முறையைப் பார்க்கும் போது அமெரிக்காவின் போக்கினை மையப்படுத்தி கனடாவும் செயல்படுவதாகவே தெரிகிறது. இரு நாட்டுக்குமான புவிசார் அரசியல் உறவு மட்டுமன்றி சர்வதேச அரசியலிலும் உலகளாவிய பொருளாதார இராணுவ நகர்வுகளிலும் ஒன்றிணைவும் கூட்டாக செயல்படும் போக்கும் காணப்படு கிறது. அதனால் அத்தகைய போக்கினை ஐரோப்பாவுக்குள்ளும் அதற்கு வெளியேயும் அவதானிக்கும் போது அமெரிக்காவின் நலன்களை தாங்கி செயல்படும் நாடாக கனட காணப்படுகிறது. p–7, காலநிலை மாற்றம், மனித உரிமைகள் மற்றும் இனப்படுகொலை போன்ற விடயங்களில் இரு நாடுகளும் ஒன்றாகவே பயணிக்கின்றன. கனடா மேற்கு நாடுகளின் அமைப்புக்குள் வலுவான அமெரிக்க நட்பு நாடாக விளங்குகிறது. போர்நிறுத்த உடன்படிக்கையினை நோர்வேயின் தலைமையில் நிகழ்த்திய அமெரிக்கா தற்போது 2009 பின்னான ஈழத்தமிழரது அரசியலை கனடாவை முன்னிறுத்தி நகர்வதாகவே தெரிகிறது. இத்தகைய நலன்களையும் இலாபங்களையும் கனடா மற்றும் அமெரிக்கா பெற்றுக் கொண்டாலும் ஈழத்தமிழரது அரசியல் அத்தகைய நாடுகளால் கையாளப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
– K.T.கணேசலிங்கம் –



வேண்டிய நிலைதவிர்க்க முடியாததாகும். ஈழத்தமிழர் இந்தியாவை மீறி வல்லரசுகளுடன் செயல்பட்டதன் விளைவுகளை அனுபவித்தனர். தற்போது வல்லரசு அல்லாத ஒரு சக்தியுடன் செயல்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதனை சரிவரக் கையாள வேண்டியது அவசியமானது, புலம்பெயர்ந்த கனேடிய ஈழத்தமிழரது அரசியல் வெற்றிகள் அதிகம் ஈழத்தமிழரது புலத்தை மையப்படுத்தியது. அதனால் கனேடிய ஈழத்தமிழரது உழைப்பினை சரிவரக் கையான வேண்டிய வாய்ப்பும் தேவைப்பாடும் புலத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கும் சிவில் அமைப்புகளுக்கும் மக்களுக்கும் உரியதாகும். அதனை அவர்கள் ஒழுங்குபடுத்தி நட்புறவு கொண்டு பலப்படுத்த வேண்டும்.

இதுவரை கனடாவின் பிரதமரது அறிவிப்புக்கு தமிழ் அரசியல்வாதிகள் வரவேற்கும் அறிக்கை மட்டுமே முன்வைத்துள்ளனர். அதனையும் கடந்து அந்த நாட்டுடன் உறவைப் பலப்படுத்தவும் நட்புறவு கொள்ளவும் முயலுதல் வேண்டும். நேரடியாக அந்த நாட்டுக்கு, விஜயம் செய்வதும் அந்நாட்டின் நாடாளுமன்ற பிரதிநிதிகளை சந்திப்பதும் பிரதமரைச் சந்திப்பதும் அவசியமான செய்முறையாக உள்ளது. நேரடியாக சந்தித்து நன்றியையும் வரவேற்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

அதில் அரசியல்வாதிகள் மட்டுமல்ல சிவில் அமைப்பினரும் ஈடுபட்டுக் கொள்ளலாம். அத்தகைய செயல்பாடுகளை கனடாவுடன் பலப்படுத்த வேண்டிய நிலை அவசியமானது. அந்தந்த நாடுகளது நலன்கள் ஒருபுறம் அமைய மறுபக்கத்தில் ஈழத்தமிழர் தமது நலன்களை அவர்கள் நோக்கி நகர்த்த வேண்டும். அதற்கான வாய்பும் சந்தர்ப்பமும் கிடைத்துள்ளது. எனவே நலன்களே அரசியலின் மையப் புள்ளியாகும்.

அத்தகைய நலன்களை நோக்கி நகர்வதே அரசுகளின் அரசியலாகும். அத்தகைய அரசியலை நோக்கி ஈழத்தமிழர் ஈடுபட வேண்டும். தவறும் பட்சத்தில் தேசம், தேசியம், சுயநிர்ணயம் என்ற நியதிகளை இழக்க வேண்டிய நிலை மேலும் தீவிர மாகும். இருபத்தியோராம் நூற்றாண்டிலுள்ள தேசியங்கள் தம்மைப் பாது காப்பதென்பது பூகோள அரசியலாலே முடியும் என்ற நியதி தவிர்க்க முடியாத தாகும்.

## மிசிசாகா இந்து மகாசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மிசிசாகா இந்து மகாசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 04 யூன் 2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 1808 Drew Road மிசிசாகாவில் அமைந்துள்ள ஜெய துர்க்கா ஆலய மண்டபத்தில் இடம்பெறும். உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள். – ஆலய நிர்வாகம்

# செங்கோல் முதல் பிரதமர் உரை வரை இடம் பெற்ற தமிழ்! தமிழ்நாட்டை குறி வைத்து நடக்கும் அரசியலா?

சுமார் ஒரு மணிநேரம் நடந்த பூஜைக்குப் பிறகு செங்கோல் முன்பாக விழுந்து கும்பிட்ட பிரதமர், புதிய நாடாளுமன்றத்தில் முதல்முறையாக உரையாற்றிய போது இங்கு செங்கோல் நிறுவப்பட்டுள்ளது. புனிதமான செங்கோலின் பெருமையை மீட்டெடுக்க முடிந்தது நம் அதிர்ஷ்டம் என்று தெரிவித்தார்.

புதிய நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை ஆதீனங்கள் டெல்லியில் பிரதமரை சந்தித்தது, நாடாளுமன்றத்தில் செங்கோல் நிறுவப்பட்டது, பிரதமர் உரை என்று பல்வேறு விதங்களில் தமிழ்நாட்டின் தொடர்பு இருந்து கொண்டே இருந்ததாகவும் இது அரசியல் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் அணுகுமுறை என்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

தெலங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன், நம் நாடாளுமன்றத்தில் நம் மனதை ஆளும் தமிழ் ஒலித்தபடியே நம் தமிழ் அரசர்கள் பயன்படுத்திய செங்கோல் நிறுவப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று நிகழ்வு தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் வரலாற்றுப் புகழைச் சேர்த்திருக்கிறது. இதைப் புறக்கணித்தவர்கள் தமிழுக்கும் தமிழ் கலாசாரத்திற்கும் துரோகம் செய்து மிகப் பெரிய வரலாற்றுப் பிழையை ஆற்றியுள்ளார்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது என்று தெரிவித்தார்.

தமிழிசை சௌந்தர்ராஜன் நாடாளுமன்றத்தில் தமிழின் பெருமை ஒலித்ததாக்க கூறியது குறித்துப் பேசிய மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன், பிரதமர் தமிழர்களுக்கு அளிக்கும் அதிக முக்கியத்துவத்தை இம்மாதிரியான உயிரற்ற பொருட்களில் கொடுப்பதை விட, தமிழ் மக்களுடைய உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கூறினார்.

ஆனால், பிரதமரின் இந்த அணுகுமுறை கட்டாயம் அரசியல் உள்நோக்கம் கொண்டது தான் என்று கூறும் மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி, தன்னை வெறுப்பவர்கள் இருப்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரையும் அதற்காக நான் ஒதுக்கி விட மாட்டேன் என்பதை உணர்த்துவதற்காகவே பிரதமர் தொடர்ந்து தமிழர் பெருமைகளைப் பேசுவதையும் தமிழர் அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் செயல்களையும் செய்கிறார் என்று கூறுகிறார்.

### புதிய நாடாளுமன்றத்தில் பிரதமர் என்ன பேசினார்?

பிரதமர் புதிய நாடாளுமன்றத்தில் ஆற்றிய முழு உரையில், ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிப் பயணத்திலும் சில தருணங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக மாறும். மே 28 அத்தகைய ஒரு நாள் தான்.

இது வெறும் கட்டடம் இல்லை, 140 கோடி இந்திய மக்களுடைய லட்சியத்தின் சின்னம். இது இந்தியாவின் உறுதியைப் பற்றிய செய்தியை உலகுக்கு வழங்குகிறது என்று கூறினார். மேலும், இந்தப் புதிய நாடாளுமன்றம் தன்னிறைவு பெற்ற இந்தியாவின் எழுச்சிக்குச் சாட்சியாக விளங்கும். செங்கோல் இங்கு நிறுவப்பட்டிருக்கிறது. இந்தச் செங்கோல் சோழ வம்சத்தில் நீதி மற்றும் நல்லாட்சியின் அடையாளமாக இருந்தது.

இப்படிப்பட்ட புனிதமான செங்கோலின் பெருமையை மீட்டெடுக்க முடிந்தது நம்முடைய அதிர்ஷ்டம். இனி அவை தொடங்கும் போதெல்லாம் இந்தச் செங்கோல் நம்மை ஊக்குவிக்கும். இந்தியா முன்னேறும் போது, உலகமும் முன்னேறும். இந்தியாவினுடைய வளர்ச்சியின் மூலம் உலகின் வளர்ச்சிக்கும் இந்தப் புதிய நாடாளுமன்றம் வழிவகுக்கும், என்று பேசினார். அதோடு, இந்தியா ஒரு ஜனநாயக நாடு மட்டுமல்லாது ஜனநாயகத்தின் தாயும் கூட. அடிமைத்தனத்துக்குப் பிறகு பலவற்றை இழந்து புதிய பயணத்தைத் தொடங்கிய நம் இந்தியா, பயணத்தில் பல ஏற்றத் தாழ்வுகளைக் கடந்து, சவால்களைக் கடந்து சுதந்திரத்தின் பொற்காலத்தில் நுழைந்திருக்கிறது.



பல ஆண்டுக்கால அந்நிய ஆட்சி நம் பெருமைகளை நம்மிடமிருந்து பறித்தது. இன்றைக்கு இந்தியா அந்தக் காலனித்துவ மனநிலையை விட்டுச் சென்று விட்டது. இந்தப் புதிய நாடாளுமன்றம், பழைமையும், புதுமையும் ஒன்றாக இருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

புதிய நாடாளுமன்றம் கட்டப்பட்டதன் மூலம் 60,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது. அவர்களுக்கென டிஜிட்டல் கேலரி கட்டப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அதனால் தான் புதிய நாடாளுமன்றம் கட்டுவது காலத்தின் தேவையாக அமைந்திருக்கிறது. இன்று, புதிய இந்தியா புதிய இலக்குகளை நிர்ணயித்திருக்கிறது. புதிய பாதைகளை விரும்புகிறது. அதன் உற்சாகம் புதியது, பயணம் புதியது, யோசனை புதியது, திசை புதியது, பார்வை புதியது. எனவே, இந்த 25 ஆண்டுகளில் நாம் அனைவரும் இணைந்து இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற வேண்டும்.

இன்று, இந்தப் புதிய நாடாளுமன்றத்தை நிர்மாணித்ததற்காக நாம் பெருமிதம் கொள்கிறோம். இங்கு இயற்றப்படும் சட்டங்கள் வறுமையை அகற்ற உதவும். கடந்த ஒன்பது ஆண்டுகளில் நாட்டில் நான்கு கோடி ஏழைகளுக்கு வீடுகள் மற்றும் 11 கோடி கழிவறைகள் கட்டப்பட்டதை நினைக்கும் போது அது எனக்கு அளவற்ற திருப்தியைத் தருகிறது. நாட்டிலுள்ள கிராமங்களை இணைக்க 4 லட்சம் கி.மீ சாலைகளை அமைத்திருக்கிறோம்,' என்று கூறினார்.

### தமிழ்மக்களின் உரிமைகள் தான் முக்கியம்

செங்கோலுக்கு அங்கீகாரம், தமிழ்நாட்டிற்கு மரியாதை போன்றவையெல்லாம் உயிரற்ற பொருட்கள். அந்த உயிரற்ற பொருட்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளுக்குக் கொடுக்கலாமே!" என்கிறார் மூத்த செய்தியாளர் குபேந்திரன். பிபிசி தமிழிடம் பேசிய குபேந்திரன், இங்கு வாழும் உயிருள்ள மக்களுக்கு என்ன தேவை, அவர்கள் பேசும் மொழிக்கு என்ன தேவை என்பதைச் செய்தால் அது காலத்திற்கும் பேசப்படும். நீதி, நெறி தவறாமல் ஆட்சி புரிவது தான் செங்கோன்மை. அதன் வழியில் வந்தது தான் செங்கோல். அந்த வகையில் ஆட்சி செய்வதில் தான் பெருமை உள்ளது. அதை அங்கு நட்டு வைத்து விட்டு, ஆட்சி செய்வதால் மட்டுமே பெருமை வந்துவிடாது.

தமிழிசை சௌந்தர்ராஜனோ, மத குருமார்களோ, ஆதீனங்களோ யார் வேண்டுமானாலும் இதைப் பெருமையாகச் சொல்லலாம். ஆனால், தமிழ் மக்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் செய்த நன்மைகள் என்ன? என்று கேள்வியெழுப்புகிறார்.

மேலும் சிறு சான்றாக மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையைச் சொல்லலாம். அதற்குப் பிறகு அடிக்கல் நாட்டப்பட்டு பல மருத்துவக் கல்லூரிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. ஆனால், இன்னமும் ஏன் மதுரை எய்ம்ஸ் முடிக்கப்படாமலே இருக்கிறது? இதைச்செய்யாமல், ஆதீனம் கொடுத்த செங்கோலை பக்கத்தில் வைத்துக் கொள்வதால் எந்த நன்மையும் வந்துவிடாது.

இப்படியெல்லாம் செய்து சமூக ஊடகங்களைப் பேச வைப்பதால் எந்தப் பயனும் இல்லை. மாநிலம் பயனுறச் செய்வது தான் ஓர் ஆட்சியாளருக்கு அழகு," என்கிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன்.

### பிரதமர் செய்வது அரசியல் தான்

தமிழ் மொழிக்கும் அதன் பாரம்பரியத்திற்கும் நாடாளுமன்றத்தில் கொடுக்கப்பட்ட பங்களிப்பு குறித்துப் பேசிய மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி, பிரதமர் நிச்சயமாக இதில் அரசியல் தான் செய்வதாக கூறினார்.

அவர் பிபிசி தமிழிடம் பேசிய போது, தமிழ்நாட்டில் உள்ள தமிழ் பிரிவினைவாதிகளான திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் தேசியவாதிகள் ஆகியோர் என்ன கேட்கிறார்கள்? நீட் தேர்விலிருந்து விலக்கு வேண்டும், மற்றவர்களுக்கு என்ன கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றிக் கவலையில்லை எங்களுக்கு அதிக நிதி வேண்டும் என்று சிலவற்றைத் தமிழர் நலன் என்று ஒரு தோற்றத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றோடு கூடுதலாக தமிழர்களை வஞ்சிக்கிறீர்கள் எனச் சொல்வார்கள். ஆனால், தமிழ்நாட்டைக் கீழே தள்ளி இன்னொரு மாநிலத்தை உயர்த்துவதற்கான வாய்ப்பே கிடையாது. அப்படியொரு தனி ஃபார்முலாவை யாரும் தீட்டவில்லை. அப்படி இருந்தால் பாஜகவால் இங்கு வெல்ல முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும், என்று கூறியவர், புதிய நாடாளு மன்ற திறப்பின் போது செய்யப்பட்டது கட்டாயம் அரசியல் தான் என்கிறார்.

தமிழர்கள் தங்களை நம்ப வேண்டும் என்பதுதான் அந்த அரசியல். அதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அதையெல்லாம் செய்கிறார். கோ பேக் மோதி' எனச் சொன்னாலும்கூட, ஒரு சிலர் வெறுப்புப் பேச்சைப் பேசுகிறார்கள் என்பதற்காக மொத்த மக்களையும் உதறி விட்டுப் போக முடியாது அல்லவா!

ஆகையால், திருவள்ளுவர் கூறுவது போல் 'அவர் நாண நல் நயம் செய்து விடல்' என்ற அணுகுமுறையைத் தான் பிரதமர் கொண்டுள்ளார் என்று கூறுகிறார் பத்ரி சேஷாத்ரி. மக்களுக்குத் தன்மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும், தான் அவர்களுக்காக நிற்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பிரதமர் தனிப் பட்ட முறையில் முயல்கிறார்.

ஒரு கலாசார தொடர்பை உருவாக்க முயல்கிறார்கள். இங்கு இருப்பவர்கள் பிரிவினையை ஆயுதமாகப் பயன்படுத்தினால், இணைத்துக் கொள்வதை பாஜக ஆயுதமாகப் பயன்படுத்துகிறது. இதில் எது நிற்கப் போகிறது என்பதை அடுத்த சில ஆண்டுகளில் தான் பார்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார் மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி.

நன்றி:- பிபிசி தமிழ்

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# கௌபீசணம் இல்லாததை மறந்து வேட்டியைக் கழற்றினால் என்னாகும்?

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு எழுபது வயதாகிறது. சிங்களவர் ஆளும் இனமாகவும், தமிழர் ஆளப்படும் இனமாகவும் எழுதாத சட்டத்தை முன் வைத்து உருவான நடைமுறையே இனவாதத்தின் தோற்றுவாய்.

தமிழருக்கு எதிரான இனவாதத்தின் பெற்றோராக இலங்கையை ஆட்சி புரிந்த - புரியும் அனைத்து சிங்களக்





கட்சிகளின் தலைவர்களையும் குறிப்பிடலாம். தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், தனிச்சிங்கள சட்ட அமுலாக்கம், களனிப் பாதயாத்திரை, பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் என்று ஆரம்பமான இனவாதம் முள்ளிவாய்க்காலில் முடிந்து விடவில்லை.

ஜெனிவாவில் பல தீர்மானங்கள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டதாயினும் அவற்றை முறியடித்து வந்த சிங்கள ஆட்சி பீடங்கள், சர்வதேசத்தை நிராக ரித்து தம்மிஷ்டப்படி தமிழரை அடக்கியாளும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இதனால் போர்க்கால படைத்துறை அதிகாரிகளுக்கான பயணத்தடை, போரை வழி நடத்திய அரசியல் தலைவர்கள் மீதான தடை என்பவற்றோடு காரியங்கள் நின்றுவிடவில்லை. சில நாடுகளில் இனப்படுகொலையை முன்னிறுத்தி பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ் விடயத்தில், அரசியல் கட்சி வேறுபாடின்றி கனடிய அரசாங்கங்கள் நிறைவேற்றும் பிரேரணைகள் கவனத்துக்குரியவை.

கனடாவின் பிரதான மாகாணமாக விளங்குவது ஒன்ராறியோ. கனடாவில் வாழும் சுமார் மூன்று லட்சம் தமிழரில் எழுபது வீதத்துக்கும் அதிகமானவர்கள் இங்கு தான் உள்ளனர். ஒன்ராறியோ மாகாண சட்டமன்றத்தில் தேர்தல் மூலம் தெரிவான இரண்டு தமிழர் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளனர். ஒன்ராறியோ மாகாண சட்டமன் றத்தில் ஒரு பிரேரணை அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவை பெற்று நிறைவேறி சட்டமாகியது. இப்பிரேரணையை முன்மொழிந்தவர் ஸ்காபரோ - றூஜ்பார்க் தொகுதி மக்கள் பிரதிநிதி விஜய் தணிகாசலம்.

மே மாதம் 18ம் திகதிக்கு முன்னரான ஒரு வாரத்தை தமிழின அழிப்பு கல்வி வாரமாக இச்சட்டம் பிரகடனம் செய்துள்ளது.

இலங்கை அரசின் சகல வளங்களையும் பெற்று இயங்கும் அவர்களின் ஆதரவாளர்கள் இச்சட்டத்தை எதிர்த்து ஒன்ராறியோ உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர் சிங்களத் தரப்பினர். எவ்வாறாவது தமிழின அழிப்பு என்பதை ஒன்ராறியோ சட்டப்புத்தகத்திலிருந்து நீக்கி விட வேண்டுமென்பதே இவர்களது குறிக்கோள்.

இதற்கான மேன்முறையீட்டுச் செலவுக்கு சிங்கள தேசமே நிதி வழங்குவது



மறைப்புக்கு அப்பாற்பட்டது. மாகாண மட்டத்திலான இனஅழிப்புச் சட்டத்தை எதிர்த்து சிங்கள தேசம் போராடிக் கொண்டிருக்கையில் கடந்த வருடம் (2022) கனடிய மத்திய நாடாளு மன்றம் ஒரு மனதாக பிரேரணையொன்றை நிறைவேற்றியது. 'ஒவ்வொரு வருடமும் மே மாதம் 18ம் திகதியை தமிழின அழிப்பு நாளாக நினைவு கொள்வதை இந்தச் சபை ஏற்றுக்கொள்கிறது' என்று இப்பிரேரணை வாசகம் அமைந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக இந்த வருடம் ஜனவரி மாதம் பத்தாம் திகதி கனடிய அரசு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ச, கோதபாய ராஜபக்ச உள்பட நால்வருக்கு பயணத் தடையை விதித்தது. மகிந்தவும் கோதபாயவும் மனித குலத்துக்கு எதிரான போரை இறுதிவரை வழி நடத்திய வரகள்

அமெரிக்கா ஏற்கனவே இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கும் மேலும் சில படைத் தளபதிகளுக்கும் பயணத் தடை விதித்தது. கடற்படைத் தளபதியாகவிருந்த வசந்த கரணகொடவுக்கு சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கா தடை விதித்தது. அமெரிக்க தடைகளுக்கு எதிராக இலங்கை அரசு எதனையும் செய்ய முடியாதுள்ளது. ஆனால், தடை விதிக்கப்பட்ட சவேந்திர சில்வாவும், வசந்த கரணகொடவும் தாங்களோ தங்கள் குடும்பத்தினரோ அமெரிக்கா செல்ல விசாவுக்கு விண்ணப்பிக்கவில்லையென்று தெரிவித்து, தங்கள் மீதான தடையை அர்த்தமற்றது என்பது போல் காட்டி தங்களை கதாநாயகர்களாக காட்சி கொடுக்க முனைந்துள்ளனர்.

ஆனால், கனடிய பிரதமர் இனப்படுகொலையை சுட்டி விடுத்த முள்ளிவாய்க்கால் 18 அறிக்கை சிங்கள தேசத்தை சற்று அசைத்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது வழமையான பாணியில் எதுவுமே தெரியாதது போல (புரியாதவர் போல அல்ல) தம்மைக் காட்டுகிறார். பிரதமர் தினேஸ் குணவர்த்தனவும் ரணில் பாணியில் தான். வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி தமக்கான ஒரு கடமையாக இலங்கையிலுள்ள கனடிய தூதுவரை அழைத்து இலங்கை அரசின் அதிருப்தியை தெரிவித்துள்ளார். புதுவருடப் பிறப்பு, கிறிஸ்மஸ், தீபாவளி கொண்டாட்ட நாட்களில் ஜனாதிபதி, பிரதமர், கட்சித் தலைவர்கள் விடுக்கும் வாழ்த்துச் செய்திகள் போன்ற மாமூலான ஒன்று தான் அமைச்சர் அலி சப்றியின் அதிருப்தி அறிக்கை.

கனடிய பிரதமர் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று குறிப்பிட்டுள்ளதால், இலங்கை முன்னெடுக்கும் நல்லிணக்க முயற்சிகளுக்கு அது தடையாக அமைவதாக அமைச்சர் அலிசப்றி குறிப்பிட்டிருப்பது வேடிக்கையான விடயம். பொறுப்புக்கூறல், சர்வதேச நீதி விசாரணை பொறிமுறை என அனைத்தையுமே இலங்கை தொடர்ந்து நிராகரித்து வருவதாலேயே ஜெனிவா அடுத்தடுத்து இலங்கை மீது தீர்மானங்களை நிறைவேற்றி வருகிறது.

இவ்விடயத்தில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் மிக முக்கியமானது கனடா. இலங்கையில் எதிர்வரும் ஆண்டுகளில் சமாதானத்தையும் மீளிணக்கத்தையும் அடைவதற்கு இன்றியமையாத அம்சங்களான மதம், நம்பிக்கை, பன்மை யியல் ஆகியவற்றின் சுதந்திரத்தை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதில் கனடா உலக நாடுகளுக்கு


## பனங்காட்டான்

தலைமைத்துவம் வழங்கியுள்ளது' என்ற கனடியப் பிரதமரின் அறிக்கையின் வாசகத்தை அமைச்சர் அலிசப்றி கவனித்திருந்தால், இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு ரூடோவின் அறிக்கை தடையாக அமையுமென்று குறிப்பிட்டிருக்க மாட்டார்.

கனடிய பிரதமரின் அறிக்கைக்கெதிராக கொழும்பிலுள்ள கனடிய தூதரகத் தின் முன்னால் சிறுதொகையினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜே.வி.பி. யின் முன்னாள் தலைவரான விமல் வீரவன்ச தமது பங்குக்கு ஒன்றை கூறியுள்ளார்: கனடாவில் பூர்வீக குடிமக்களை இனப்படுகொலை செய்த நாள் ஜீன் 21ம் திகதி. அன்றைய நாள் கனடிய அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளார் (கொழும்பிலா அல்லது கனடாவிலா என்று குறிப்பிடவில்லை).

'கனடா மிகப்பெரிய நாடு. அங்கு போதிய நிலவசதி உண்டு. எனவே தமிழருக்கு அங்கு ஓர் ஈழத்தை அமைத்துக் கொடுக்கலாம்' என்று பிரதமர் ரூடோவுக்கு இலவச ஆலோசனை வழங்கியுள்ளார் முன்னாள் கடற்படை அதிகாரியும், தற்போது நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர. (22ம் பக்கம் பார்க்க)


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தாய்லாந்து தேர்தல்:- இராணுவத்திற்கு பாரிய சவால்!

- P.K. பாலச்சந்திரன்

தாய்லாந்தின் பிரதிநிதிகள் சபைக்கு மே 14 அன்று நடந்த தேர்தலில், இளைஞர்கள் தலைமையிலான ீசழபசநளளளைநு Move Forward fl;ep (MFP) தனிப் பெரிய குழுவாக உருவெடுத்ததுடன், 500 இடங்களில் 151 இடங்களைப் பெற்றது. பியூ தாய் கட்சி 141 இடங்களையும் பூமிஜைதாய் 71 இடங்களையும் ஐக்கிய தாய் நாடு கட்சி 36 இடங்களையும், ஜனநாயகக் கட்சி 25 இடங்களையும், பலாங் பிரசாரத் 40 இடங்களையும் பெற்றன. மீதமுள்ள இடங்கள் பல சிறிய கட்சிகளுக்கு கிடைத்தன.

MFP ஆட்சியமைப்பதற்காக ஒரு கூட்டணியை உருவாக்கியுள்ளது கூட்டணியின் கொள்கை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கஞ்சா ஒரு கட்டுப்படுத்தப்பட்ட பொருளாக இருக்கும் என்றும், ஏகபோகஉரிமைகள் உடைக்கப்படும், பொருளாதாரத்தில் போட்டித் தன்மை வளர்க்கப்படும், பாலியல் நோக்கு நிலையைப் பொருட்படுத்தாமல் திருமண சமத்துவம் உறுதி செய்யப்படும், போர் நிலைமையை தவிர கட்டாய இராணுவசேவைக்கு தடை விதிக்கப்படும், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் தாய்லாந்து அதன் முனைப்பான வகிபாகத்தை மீட்டெடுக்கும் எனவும் கூறுகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) என்பது பகிரப்பட்ட விழுமியங்கள், பகிரப்பட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் பகிரப்பட்ட பொறுப்புக்கூறல் தொடர்பானது' என்று ஆசீ இன் தலைவரும்கூட்டணியின் ஊகிக்கப்படும் பிரதமரான பிடா லிம் ஜாரோ என்ரட் கூறினார்.

2019ஆம் ஆண்டு தேர்தல்களில் வலுவாகக் காணப்பட்ட பின்னர் நீதிமன்றங்கள் கலைத்த Future Forward கட்சியின் வாரிசாக 2020 இல் Move Forward கட்சி உருவாக்கப்பட்டது. அந்த கலைப்பு 2020 மற்றும் 2021 இல் இளைஞர்கள் மற்றும் மாணவர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க வீதிப் போராட்டங்களை ஆரம்பித்தது.

சமீபத்திய தேர்தல்களில், MFP அரசியல் உயரடுக்கிற்கு வெளியேயிருந்து தன்னார்வலர்களை தெரிவுசெய்ததுடன் அதன் கொள்கைகளை விளக்குவதற்கு வீடு வீடாகச் சென்றது. இது MFP தங்கள் குழந்தைகளுக்கான நிலைமைகளை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை அறிய விரும்பும் பெற்றோருக்கு மாணவர்கள் செய்தியை வழங்குவார்கள் என்று எதிர்பார்த்தமையால் பல்கலைக்கழகங்களில் கவனம் செலுத்தியது.

2019 தேர்தலில் சமூக ஊடகங்கள் முக்கிய பங்கினை வகித்தன, ஆனால் இந்த முறை அது அவ்வாறு பங்களிக்கவில்லை. சமூக ஊடகங்களின் பரவலான பயன்பாடு ஒடுக்குமுறைகளுக்கு வழிவகுக்கும் என்று அஞ்சப்பட்டதால் பரப்புரையாளர்கள் தனிப்பட்ட தொடர்புகளைச் சார்ந்திருந்தனர். குறியீட்டுவாதம் மிகையான தொடர்பாடலின் இடத்தைப் பிடித்தது.

கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாக தாய்லாந்தில் ஆட்சி செய்து வந்த இராணுவ ஆதரவுடைய முடியாட்சி சார்பு கட்சிகளை நிராகரிக்க வாக்காளர்கள் முடிவு செய்திருந்தமையால் MFPயின் பிரச்சாரம் வெற்றி பெற்றது.

எவ்வாறாயினும், இந்த பழமைவாத கட்சிகள் தீர்க்கமான முறையில் தோற்கடிக்கப்பட்டதாக தாய்லாந்து கூறுவதற்கு முன் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. மன்னராட்சியைப் போலவே தாய்லாந்து அமைப்பிலும் இராணுவம் வேரூன்றியுள்ளது என்பதைத் தவிர, கிட்டிய அருகாமையில் தடைகளும் உள்ளன. பின்வருவனவற்றை அவதானியுங்கள்:

முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு 60 நாட்கள் ஆகும். இந்த காலகட்டத்தில் எதுவும் நடக்கலாம். உதாரணமாக, கடந்த 2019 நாடாளுமன்றத் தேர்தலில், இராணுவ ஆதிக்கம் செலுத்திய செனட் பிரயுத் சான்-ஓச்சாவுக்காக ஒருமனதாக வாக்களித்தது, இருப்பினும் அவரது கட்சி (அப்போது பலாங் பிரசாரத்) பியூ தாயை விட (116 முதல் 136 வரை) குறைவான இடங்களைப் பெற்றிருந்தது. இறுதியில், தனது கைகளில் அதிகாரத்துடன், பிரயுத் சான்-ஓச்சா 19 கட்சிகளின் கூட்டணியை ஒன்றாக இணைத்ததுடன், அது அவரை நான்கு ஆண்டுகள் பதவியில் வைத்திருந்தது.



இராணுவம் அதியுயர் அதிகாரம் செலுத்தும் செனட்டை விட பிரதிநிதிகள் சபை வெற்றி பெற வேண்டும். இராணுவத்தால் நியமிக்கப்பட்ட செனட்டின் 250 உறுப்பினர்கள் பிரதமரைத் தேர்ந்தெடுப்பதில் வாக்களிப்பதற்கு பாராளுமன்ற விதி அனுமதிக்கிறது. எனவே, பிரதமர் பதவியைப் பெற, ஒரு வேட்பாளர் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை முழுவதிலும் 376 வாக்குகளைப் பெற வேண்டும். இது மிகவும் கடினமான விடயமாகும்.

சபாநாயகர் தேர்தல் சிக்கலானதாக இருக்கலாம். சபாநாயகர் பதவி முக்கியமானதாக உள்ளது, ஏனெனில் அவர் பாராளுமன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்துபவராவார். MFP மற்றும் பியூ தாய் கட்சி இடையே சபாநாயகர் தெரிவு தொடர்பாக ஏற்கனவே மோதல் ஏற்பட்டுள்ளது. MFP தனிப்பெரும் கட்சியாக பதவியை அடைய வேண்டும் என்று நினைக்கும் அதே வேளையில், அதிகாரச் சமநிலையை உறுதிப்படுத்த பதவி தமக்கு வர வேண்டும் என்று பியூ தாய் கூறுகின்றது.

மன்னராட்சி மற்றும் ஆயுதப்படைகளை சீர்திருத்துவதற்கான MFPயின் எந்த முயற்சியையும் இராணுவ மேலாதிக்கமுள்ள செனட் எதிர்க்கும். சமீபத்திய செய்தி என்னவென்றால், கூட்டணி அரசியலின் நிர்ப்பந்தங்கள் ஏற்கனவே MFP மன்னராட்சியைப் பாதுகாக்கும் சட்டங்கள் அல்லது lese-majeste சட்டங்கள் மீதான அதன் நிலைப்பாட்டை நீர்த்துப் போகச் செய்துள்ளது. lese-majeste சட்டங்களின் கீழான குற்றங்களுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

அடுத்த சில மாதங்களில் விடயங்கள் எவ்வாறு நடைபெற்றாலும், அரண்மனையில் உள்ள இராணுவம் மற்றும் பழமைவாதிகள் அரசாங்கத்தில் முக்கிய வகிபங்கை வகிப்பார்கள் என்று மூலோபாய மற்றும் சர்வதேச கற்கைகளுக்கான மையத்தின் (CSIS) ஓர் அறிக்கை கூறுகிறது.

அவர்கள் நேரடி பங்கேற்பாளர்களாகவோ அல்லது Move Forward மற்றும் பியூ தாய் மீது டமோக்கிள்ஸின் வாளைப் பிடித்துக் கொண்டு, சீர்திருத்தத்திற்கான தங்களின் திட்டங்களைக் குறைக்கவோ அல்லது மற்றொரு சதிக்கு ஆபத்தை ஏற்படுத்தவோ கட்டாயப்படுத்தலாம்' என்று அறிக்கை கூறுகிறது.

அமெரிக்க-தாய்லாந்து உறவுகளில் தேர்தல்களின் தாக்கம் குறித்து, CSIS அறிக்கை கூறுகையில்: இராணுவ அல்லது நீதித்துறை சதி இல்லை என்று கருதினால், அமெரிக்க-தாய்லாந்து கூட்டணி செயல்பாட்டு ரீதியாக மாறாமல் இருக்கும். பயிற்சி, சட்ட அமுலாக்கம், இணைய பாதுகாப்பு மற்றும் எண்ணற்ற பிற துறைகளில் ஒத்துழைப்பு தொடரும். தாய்லாந்து குறைந்த பட்சம் குறுகிய காலத்திலாவது, 2014 ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு செய்தது போல இறுதியில் அரசியல் வன்முறையின் மற்றொரு சுழற்சியில் நுழைந்தால் அது அமெரிக்க-தாய்லாந்து இராணுவ ஒத்துழைப்பைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும்.

கடந்த தசாப்தத்தில் நீடித்து வந்த சில அவநம்பிக்கையை பிரயுத்தின் ஆட்சியின் கீழ் இரு தரப்பும் சரிசெய்ய முடியும். சீனாவுடனான போட்டியை உள்ளடக்கிய பல பிரச்சினைகளில் தாய்லாந்து அமெரிக்காவுடன் வெளிப்படையாக ஒத்துப்போக வாய்ப்பில்லை என்றாலும், அது பெய்ஜிங்கின் நெருங்கிய அரவணைப்பையும் தற்போதைய அரசாங்கத்தால் தள்ளப்படும் வாஷிங்டனின் அவநம்பிக்கையையும் நடுநிலைப்படுத்தக்கூடும்.

MFPஇன் பெரும்பாலான ஆதரவாளர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமெரிக்க சார்புடையவர்களாக இருப்பார்கள் அல்லது குறைந்த பட்சம் சீனாவின் மீது சந்தேகம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று நம்புவதற்கு காரணம் இருப்பதாக CSIS அறிக்கை கூறுகிறது, ஏனெனில் அவர்கள் முன்னைய ஆதரவை ஹாங்காங், தைவான், தாய்லாந்து மற்றும் அதற்கு அப்பால் உள்ள ஜனநாயகத்திற்கு ஆதரவான குரல்களின் நிகழ்நிலை வலையமைப்பான Milk Tea கூட்டணிக்கு அளித்தனர். 2021இல் மியான்மர் இராணுவம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து மியான்மர் இராணுவம் முற்றிலுமாக புறக்கணித்த ஆசியான் அமைப்பு மத்தியஸ்தம் வகிக்கும் ஐந்து அம்ச ஒருமித்த சமாதானத் திட்டத்தை மியான்மார் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதில் தாய்லாந்தின் வகிபாகத்தை MFPஇனுடைய தலைவர் பிடா லிம்ஜாரோன்ராட் அங்கீகரித்ததாக CSIS அறிக்கை குறிப்பிடுகிறது.

தாய்லாந்துக்கும் மியான்மருக்கும் இடையே மனிதாபிமான வழித்தடத்தை அமைப்பது அவரது முன்னுரிமைகளில் ஒன்றாகும். இருப்பினும், MFPஇன் சமூக நலக் கொள்கைகள் தொடர்பில் அமெரிக்கா கவலைப்படலாம்,

உண்மையில் அவை தனியார் துறை தொடர்பில் கவலைப்படுகின்றன. MFP மற்ற கட்சிகளைப் போலவே, பண உதவிகள் மற்றும் சம்பளம் மற்றும் ஊதியங்களை உயர்த்துவதாக உறுதியளித்துள்ளது. MFP இனுடைய ஆட்சி கடுமையான நிதி பற்றாக்குறையை எதிர்கொள்ளலாம்.

தாய்லாந்து இராணுவம் உண்மையில் இளைஞர் சக்தியின் கைகளால் பின்னடைவை சந்தித்துள்ளது. ஆனால், இராணுவம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆட்சி செய்து வரும், இளைஞர்கள் தலைமையிலான ஜனநாயக சக்திகளின் அழுத்தத்தில் இருக்கும் மற்றைய நாடுகளில் இது எந்த விளைவையும் ஏற்படுத்த வாய்ப்பில்லை. ஏனென்றால், ஜனநாயக அமைப்புகள் மற்றும் வழக்கமான தேர்தல்களின் பொறிகளை மீறி தாய்லாந்து இராணுவம் நாட்டின் பொறுப்பில் இருந்து வருகிறது. தாய்லாந்து இராணுவத்தைப் போலவே, மியான்மர், பாகிஸ்தான், எகிப்து ஆகிய நாடுகளிலும் இராணுவத்தினர் நன்கு வேரூன்றி உள்ளனர்.

இளைஞர் சக்தியைப் பொறுத்தவரை, தாய்லாந்தில் அது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் கட்சி மூலம் வழி நடாத்தப்பட்டதால் வெற்றி பெற்றது. இது கட்டுப்பாட்டால் குறிப்பிடப்பட்டது. இலங்கையில் இதற்கு நேர்மாறாக, அரகலய இளைஞர் இயக்கம் எந்தத் தலைவரோ அல்லது தலைமைத்துவக் கட்டமைப்போ இல்லாத நிலையில் இருந்தது. இது நாசவேலை மற்றும் எரியுட்டல் வரை சென்றது. எனவே, அது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெளியேற்றத்தை ஏற்படுத்திய போதிலும், அதன் அடிப்படைக் கொள்கைகளை வழங்கத் தவறி விட்டது.

பாகிஸ்தானில், இம்ரான் கானின் பின் தொடரும் இளைஞர்களின் நாசவேலை மற்றும் எரியுட்டல் காரணமாக அவரது நெருங்கிய கூட்டாளர்கள் பலர் அவரது கட்சியை விட்டு வெளியேறினர். இதற்கு நேர்மாறாக, தாய்லாந்தின் ஒழுக்கமான, நன்கு வழி நடாத்தப்பட்ட மற்றும் அமைதியான இளைஞர் இயக்கம் பாராட்டுகளையும் வாக்குகளையும் வென்றது.

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# பௌத்த மயமாக்கலும் மத மாற்றமும்

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்திய உள்துறை அமைச்சுக்கு ஒரு புலனாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தமிழகம் மற்றும் ஆந்திரா மாநிலங்களில் மத மாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அமைப்புகளுக்கு, இலங்கையில் இருந்து நிதியுதவி கிடைத்து வருகிறது என்பதே அந்த புலனாய்வு தகவல்.

இந்தியாவின் உள்துறை புலனாய்வு அமைப்பினாலேயே, இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக புதுடில்லி தகவல்கள் தெரிவித்தன. சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பல இலங்கையில் உள்ள தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு பெருந் தொகையான நிதியை வழங்கி வருகின்றன என்றும், அவற்றில் ஒரு பகுதியை, பௌத்த அமைப்புகள் தமிழகம் மற்றும் ஆந்திராவில் மத மாற்றத்தில் ஈடுபடுகின்ற அமைப்புகளுக்கு அனுப்பி வருகின்றன என்றும் அந்த புலனாய்வு தகவலில் கூறப்பட்டிருக்கிறது.

இது குறித்து இந்திய உள்துறை அமைச்சு தீவிர கவனம் செலுத்தி வருவதாக கூறப்படுகிறது. இந்தியாவை ஆளும், வலதுசாரி தீவிர இந்துத்துவ கொள்கை கொண்ட பா.ஜ.க.அரசாங்கம் மதமாற்ற நடவடிக்கைகளை தீவிரமாக எதிர்த்து வருகிறது. டில்லி, உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், உத்தரகாண்ட், கர்நாடகா, ஜார்கண்ட், இமாச்சலப் பிரதேசம் என இந்தியாவில் ஏழு மாநிலங்களில் மதமாற்ற தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்துக்களை மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் தற்போதும் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதாக பாரதிய ஜனதா கட்சியும் அதன் கூட்டணி கட்சிகளும் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றன.

இந்துக்களை மதமாற்றம் செய்வதற்கு வெளிநாடுகளில் இருந்து பெருந் தொகை நிதி வருவதாக மத்திய அரசு சந்தேகிக்கிறது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் இருந்து இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளுக்கு நிதி உதவிகள் கிடைப்பதாக எழுந்த சந்தேகத்தின் அடிப்படையில், இந்திய அரசாங்கம் தொண்டு நிறுவனங்களின் மீது உன்னிப்பாக கவனம் செலுத்தியது.

கூடங்குளத்தில் அணுமின் நிலையத்துக்கு எதிராக போராட்டங்கள் தீவிரமடைந்த போது, அந்த போராட்டத்தில் ஈடுபட்ட உள்ளூர் தொண்டு அமைப்புகளுக்கு வெளிநாட்டு நிதி கிடைத்து வருகிறது என்று ஐ.பி எனப்படும் உள்துறை புலனாய்வு அமைப்பு அறிக்கை சமர்ப்பித்தது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேற்கத்தேய நலன்களை பேணுகின்ற பல்வேறு நோக்கங்களுக்காக மேற்குலக நாடுகளில் இருந்து பெருமளவு நிதி தொண்டு நிறுவனங்களுக்கு கிடைத்து வருவதாக கூறப்பட்டது. அமெரிக்கா, ஜேர்மனி, பிரித்தானியா, நெதர்லாந்து போன்ற நாடுகளில் இருந்தே அதிகளவு நிதி சுற்றாடல் பாதுகாப்பு என்ற பெயரில், இந்தியாவுக்கு வந்து சேருவதாகவும், இந்த நிதியைக் கொண்டு இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களை முடக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும், அப்போது இந்திய புலனாய்வு அமைப்பு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

குறித்த காலகட்டத்தில் இந்தியாவில் 42,273 தொண்டு நிறுவனங்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றை கட்டுப்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியை பெறும், தொண்டு நிறுவனங்களை ஒழுங்கமைக்கும் சட்ட திட்டங்களை இந்திய அரசாங்கம் கொண்டு வந்தது.

அதற்கு அமைய 8,875 தொண்டு அமைப்புகள் முடக்கப்பட்டன. இந்திய புலனாய்வு அமைப்பின் இந்த அறிக்கையை, உதாசீனம் செய்ய முடியாத நிலையில் மத்திய அரசாங்கம் இருக்கிறது. இலங்கையுடன் இந்த விவகாரத்தில் முரண்பாட்டை தோற்றுவிப்பதா அல்லது உள்நாட்டு பாதுகாப்பின் மீது கவனம் செலுத்துவதா என்று குழப்பம் இந்திய அரசாங்கத்துக்கு இருப்பதாக தெரியவில்லை.



ஏனென்றால் இந்தியா எப்போதும் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு என்று வரும் போது, தனது சொந்த பாதுகாப்பு நலன்களை விட்டுக் கொடுக்கவோ, அதில் சமரசம் செய்து கொள்வதற்கோ இடம் கொடுப்பதில்லை. குறிப்பாக மத மாற்றம் என்பது ஆபத்தான ஒரு விவகாரமாக இந்தியாவில் உள்நாட்டு குழப்பங்களை தோற்றுவிக்க கூடிய ஒரு விடயமாக கருதப்படுகிறது.

அதிலும் இந்துத்துவ வலதுசாரி பா.ஜ.க. அரசாங்கம் ஆட்சியில் இருக்கக் கூடிய நிலையில் இவ்வாறான மதமாற்ற நடவடிக் கைகளை சகித்துக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்க முடியாது. தமிழகம் மற்றும் ஆந்திராவில் மதமாற்ற நடவடிக்கைகளுக்கு இலங்கையின் ஊடாக நிதி உதவி வருகிறது என்பதை விட, பௌத்த அமைப்புக்களின் ஊடாக அந்த நிதி உதவி வருகிறது என்ற புலனாய்வு தகவல் தான் முக்கியமானது. இலங்கையில் உள்ள பௌத்த அமைப்புக்களுக்கு எவ்வாறு நிதி கிடைக்கிறது? அவர்கள் ஏன் இந்தியாவில் மதமாற்றத்தில் ஈடுபடும் அமைப்புகளுக்கு நிதி உதவியை வழங்க வேண்டும்?

அண்மையில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்திய பேச்சுக்களின் போது, வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் விவகாரம் குறித்து முக்கியமாக கலந்துரையாடப்பட்டது. அப்போது தற்செயலாக தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வாய்வு மற்றும் செயற்பாடுகளுக்கு வெளியில் இருந்து நிதி உதவி கிடைத்து வருவது பற்றி தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார். உடனடியாக அந்த விவகாரத்தில் தலையிட்ட ஜனாதிபதி, தொல்பொருள் திணைக் களம் வெளியில் இருந்து கிடைக்கும் நிதி உதவிகளைக் கொண்டு அகழ்வாய்வுகளில் ஈடுபடக் கூடாது என உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை நீக்க வேண்டும் என்று அஸ்கிரியபீடத்தின் மகாநாயக்கர் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரிலும், கடிதம் மூலமும் வலியுறுத்தியுள்ளார். தொல்பொருள் திணைக்களத்துக்கு வெளியிலிருந்து கிடைத்து வரும் நிதி உதவி இங்குள்ள பௌத்த அமைப்புகளுக்கும் கிடைத்து வருவதாக கூறப்படுகிறது. இவ்வாறான நிதி உதவியில் ஒரு பகுதியே தென்னிந்தியாவில் மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இந்த கட்டத்தில் இந்தியாவுக்கு புதியதொரு சிக்கல் உருவாகியிருக்கிறது. வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தமிழர் தரப்பு இந்தியாவிடம் முறையிட்ட போது அதுபற்றி புதுடில்லி அவ்வளவாக கண்டு கொள்ளவில்லை. அந்த விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களை கொடுக்கவும் இல்லை. தங்களை இந்து மதத்தின் காவலர்கள் என்று கூறிக் கொள்ளும் பா.ஜ.க.வினர், இலங்கையில் பௌத்த சமயத்தை இந்து மதத்தின் ஒரு பிரிவாகவே அடையாளப்படுத்த முற்படுகின்றனர். அதனால் பௌத்தம யமாக்கலுக்கு எதிராக இந்தியா அதிகம் குரல் கொடுக்க முன்வரவில்லை.

இவ்வாறான நிலையில் தான், இப்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கலுக்கும் இந்தியாவில் முன்னெடுக்கப்படும் மத மாற்ற நடவடிக்கைகளுக்கும் தொடர்பு இருப்பதான விடயம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. இந்திய புலனாய்வு அமைப்பின் தகவல்கள் அறிக்கைகள் எல்லாம் நூறுவீதம் சரியானவை என்று கூறமுடியாது. அதற்காக அந்த புலனாய்வு தகவல்கள் நூறு வீதம் பொய்யானவையாகவும் இருக்க முடியாது.

இந்திய புலனாய்வு அமைப்புகள் வலிமையானவை துல்லியமான தகவல்களை திரட்ட கூடியவை. அதற்கு ஒரு உதாரணம் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக இலங்கைக்கு முன்கூட்டியே வழங்கப்பட்ட புலனாய்வு தகவல்கள் ஆகும்.

இவ்வாறான நிலையில், இந்திய புலனாய்வு அமைப்பின் அறிக்கையை, இந்திய உள்துறை அமைச்சினால்


கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





உதாசீனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த விவகாரம் தொடர்பாக இந்தியா நடவடிக்கையில் இறங்கினால், அல்லது விசாரணைகளை தொடங்கினால், இலங்கையில் உள்ள பௌத்த அமைப்புகளுக்கு உள்ள தொடர்புகள் வெளிவரும். அதனை இலங்கை அரசாங்கம் விரும்புமா என்ற கேள்வி இருக்கிறது. இலங்கை அரசாங்கம் எப்போதும், பௌத்த மத பீடங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டது. பௌத்த பீடங்கள், அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதி இந்தியாவில் மதமாற்றத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது என்றால், அதனை இந்தியா ஒரு போதும் விரும்பாது. அதனைத் தடுப்பதற்கு இலங்கையை நாடும். ஆனால்


இலங்கை அரசாங்கத்தினால், பௌத்த அமைப்புகளுக்கு தடை போட்டுக் கட்டுப்படுத்துவது இலகுவானதாக இருக்காது.(22ம் பக்கம் பார்க்க)





# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! நிதான மாக பேசுவது காரிய வெற்றி க்கு உதவும். மற்றவர்களின் காரியங்களில் ஈடுபடும் போது கவனம் தேவை. திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் கவனம் தேவை. வாடிக்கையாளர் களை அனுசரித்து நிதானமாக பேசுவது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர் கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக் கும். மேலதிகாரிகளுடன் கவனமாக பேசு வது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! சில குழப்பங்கள் நேர்ந்தாலும் இது வரை நடக்காமல் இருந்த காரி யத்தை சிறப்பாக செய்து முடி த்து மனநிம்மதி அடைவீர்கள். அரசாங் கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நடந்து முடியும். முக்கிய நபர்கள் மூலம் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஆடம்பர செலவுகள் அதிக ரிக்கும். தொழில் வியாபாரம் நடக்க தேவையான உதவிகள் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சில சங்கடங்கள் நேரலாம். கெட்ட கனவுகள் உண்டாகலாம். எதிர் பாராத இடமாற்றம் ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படலாம். எதிர்பார்த்த பணம் கைக்கு வர தாமதமாகும். இடம் பொருள் அறியாமல் பேசுவதால் அடுத்தவர்களிடம் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவுகள் உண்டாகும். வீண் அலை ச்சல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர் கள் தேவையற்ற பயணம் செல்ல நேரலாம்.





கடகராசி அன்பர்களே! எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்து கொள்வீர்கள். சுக்கிரன் சஞ்சாரத் தால் அலைச்சலை சந்திக்க நேரிடும். எதிர்பாலினத்தாரிடம் பழகும் போது கவனம் தேவை. விருப்பத் திற்கு மாறான சம்பவங்கள் நடக்கலாம். தொழில் வியாபாரத்தில் குறிப்பாக கூட்டு தொழிலில் இருப்பவர்கள் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது.கணவன். மனைவிக் கிடையே நீடித்து வந்த மனவருத்தம் நீங்கி சந்தோஷமான சூழ்நிலை ஏற்படும்.





சிம்மராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டா கும். அடுத்தவர்களின் குற்றச் சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக் கும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனை களை ஏற்கும் போது கவனம் தேவை. அவற்றை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. புதிய பொறுப்புகள் கிடைக்கும். புதன்கிழமை அவதானம் தேவை.




கன்னிராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் நன்றாக நடந்து முடியும். கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர் களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக் காமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் சுபகாரியங்கள். மகிழ்ச்சியான கொண்டா ட்டங்கள் இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! மன தில் குறிக்கோளை வைத்து துணிவுடன் செயலாற்றுவீர்கள். உங்கள் பேச்சு திறமையால் பல காரியங்கள் சிறப்பாக நடந்துமுடியும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் அவர் களால் உதவி கிடைக்கலாம். நீங்கள் செய்யும் காரியங்களுக்கு உதவுவதற்காக யாராவது ஒருவர் துணை நிற்பார். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். போட்டிகள் விலகும். உத்தி யோகஸ்தர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! சாம ர்த்தியமான பேச்சின் மூலம் காரிய ங்களை சாதிப்பீர்கள். வாழ்க்கை யில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் வரும். வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். மற்றவர்களின் நலனுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். கவுரவம். அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோ கத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம்.








தனுசுராசி அன்பர்களே! எதிலும் லாபமான நிலை காணப்படும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிலும் தயக்கமோ பயமோ இருக்காது. தந்தை யின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். ஆனால் கைக்கு பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் இருப் பவர்கள் மேன்மை அடைவார்கள். குடும் பத்தில் இருப்பவர்கள் உங்கள் விருப்பத் திற்கு மாறாக எதையும் செய்வார்கள்




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை தைரியமாக உறுதி யுடன் செயல்படுத்துவீர்கள் .உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.வீடு. மனை வாங்க திட்டமிடுவீர்கள். எடுக்கும் காரியம் சிறிது முயற்சிக்கு பின் நடைபெறும். தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்தது இனி சீராகும். பழைய பாக்கிகள் வசூலா கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுத லாக பணியாற்ற வேண்டி இருக்கும். தேவையான வசதி வாய்ப்புகள் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்து வெற்றி பெறுவீர்கள். மனதில் தைரியமும். தன்னம்பிக்கையும் பிறக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்கள். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தந்தையுடன் மன ஸ்தாபம் ஏற்படலாம். கணவன். மனைவிக் கிடையே ஒற்றுமை காணப்படும். நம்பிக் கையுடன் செயலாற்றி நன்மை அடைவர்.




மீனராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். எடுத்த காரியத்தை செய்யும் போது எது சரி. எது தவறு என்று தடுமாற்றம் ஏற்பட்டாலும் திறமை யால் அதனை செய்து முடிப்பீர்கள். பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். நிதி உதவி கிடைக்கும். வாடிக்கையாளர் மத்தியில் மதிப்பு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## கௌபீசணம் இல்லாததை மறந்து வேட்டியைக் கழற்றினால் என்னாகும்?

(19ம் பக்கத் தொடர்ச்சி) கனடாவில் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பூ ர்வீக குடிக ளுக்கு எதிரான இனரீதியான தாக்குதல்களுக்கு பிரதமர் ரூடோ பல தடவை பகிரங்க மன்னிப்பு கோரியதும், அவர்களின் புனர்வாழ்வுக்காக கோடிக் கணக்கான டாலர்களை ஒதுக்கி வருவதையும் மில் விமர் வீரவன்சவும், சரத் வீரசேகர வும் அறியாதிருப்பது வெட்கக்கேடானது.

இனவாதத்தை ஊட்டி வளர்த்து அதிலிருந்து விடுபட முடியாதுள்ள இலங்கை இப்போது மதவாதத்தையும் இணைத்து ஊதி வளர்த்து வருகிறது. இவ்வாறான தொடர் செயற்பாடுகளை கண்டித்த கனடியப் பிரதமர் அறிக் கையை இலங்கையில் வாழும் சிங்கள மக்கள் அறிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக இதனை கொழும்பின் பிரதான ஊடகங்கள் மறைத்தன. ஆனால், விமர் வீரவன்ச, சரத் வீரசேகர ஆகியோரின் ரூடோவுக்கு எதிரான அறிக்கைகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து, சர்வதேசம் இலங்கையை எவ்வாறு பார்க்கின்றது என்பதை அப்பட்டமாக தெரியப்படுத்தியுள்ளன. ஏற்கனவே, கௌபீசணத்தை இழந்து நிற்பவர் அதனை மறந்து வேட்டியைக் கழற்றினால் என்னாகும்?

## பௌத்த மயமாக்கலும் மத மாற்றமும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) ஏனென்றால், இலங்கையில் சிங்கள பௌத்த மேலாதி க்கம் தான், ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கிறது. அதனை மேவி ஒரு அரசாங் கத்தினால் நடந்து கொள்ள முடியாது. இந்தநிலையில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே இந்த விவகாரம், சிக்கலான ஒன்றாகவே இருக்கப் போகிறது.

## பேராசிரியர்கள் ஒன்றிணைந்தால்

(4ம் பக்கத் தொடர்ச்சி) திருமண மண்டபங்கள் போதும் இனி கல்வி மண்டப ங்கள் உருவாக வேண்டும். தொழிற்சாலைகள் உருவாக வேண்டும். இதன்மூலம் கல்வி கற்றலிலிருந்து இடை விலகிய மாணவர்கள், வேலை வாய்ப்பில்லாத வர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கி வேலை வாய்ப்புக்களை வழங்க முன் வர வேண்டும்

தற்போதைய சூழலில் தனியார் பல்லை கழகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வரு கின்றது. இத்தகைய அனுமதி களைப் பெற்று தனியார் பல்கலைக் கழகங்கள் இங்கும் உருவாகின்றபோது வாள்வெட்டு கலாசாரம், போதைவஸ்து கலாசாரம் இல்லாது போகும் நிலை ஏற்படும். எனவே, பேராசிரியர்கள், கல்விமான்கள், சமுதாயப் பெரியார்கள், சான்றோர்கள் ஒன்றுகூடி இதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். எமது பிரதேசத்தைஅழகாக்குவதற்கு தெற்கில் இருந்து யாரும் வரவேண்டியது இல்லை. நாங்களே அதனை செய்ய முன்வரவேண்டும் என்றார்.

## கவிஞர் வைரமுத்து மீது ஏன் நடவடிக்கை...

(5ம் பக்கத் தொடர்ச்சி) அரசியல் கட்சித் தலைவர்கள் பேசும் போது மாற் றம் வரும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. ஆனாலும் பாலியல் சுரண்டல்கள், தொல்லைகள் குறைந்த பாடில்லை. போக்ஸோ உள்ளிட்ட சட்டங்கள் இருந்தும் அனைத்து துறை யிலும் பாலியல் குற்றச்சாட்டு எழத் தான் செய்கிறது. குறிப் பாக, திரைத்துறையில் இன்றும் பாலியல் குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. உங்கள் நண்பர் மற்றும் ஆதரவாளரான கவிஞர் வைரமுத்து வின் மீது 17க்கும் மேற்பட்ட பெண்கள் புகாரளித்தும், உங்கள் அருகாமையில் அவர் மகிழ்ச்சியுடன் தான் இருக்கிறார்.

இதனால் அவர் குறித்து மேலும் பெண்கள் பேச முடியாதவாறு செய்கிறார். பிரிஜ் பூஷணுக்கும், வைரமுத்துவுக்கு விதிகள் வேறு வேறு கிடையாது. நமது நாட் டின் சாம்பியன்கள், மல்யுத்த வீரர் கள், நாட்டிற்கு பெருமை சேர்த்தவர்கள் பிரிஜ் பூஷணின் பெயரைக் கூறியுள்ளார்கள். அதேபோல் தான் 17க்கும் மேற்பட்ட பெண்கள் வைரமுத்துவின் பெயரை குறிப்பிட்டுள்ளனர். தொலைக்காட்சி மற்றும் திரைத்துறையில் பெண்கள் மற்றும் ஆண்கள் தொடர்ந்து பல்வேறு சிக்கல் களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

குழந்தைகள் நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் தொகுத்து வழங்கியபோது ரமேஷ் பிரபா குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல் செய்ததாக அவரது பெய ரும் வெளியானது. எனவே அனைத்திற்கும் ஆவண செய்ய வேண்டும்' என தெரிவித்துள்ளார்.


உடன் இறைச்சி விநியோகம்

பிறந்தநாள், ஊர் ஒன்றுகூடல்கள், வீட்டுக் கொண்டா ட்டங்கள் மற்றும் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு ஊர் ஆட்டிறைச்சி சிறு சிறு துண்டுகளாக மொத்தமாகவும்சில்லறையாகவும் துப்பரவாக வெட்டிக் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு

ஹீ 647 328 8880 / சானு 416 456 3051

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
423 குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
12வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

---

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
HOMELIFE
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON-M1X 0C3
(Markham /McNicoll)
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A,
MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
Personal Tax
Corporate Tax
Book Keeping & Accounting
Payroll Services
GST/HST Filing
Corporate Services
Business Startup
Financial Planning


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
HIGHER STANDARDS
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.